தொகுதி 8.] 1929வூ ஆகஸ்டுமீ 1௳ [பகுதி 7

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமிமுதலியார்

பிரசுரகர்த்தா
...ணிசாமி முதலியார்,
...நிலயம், சென்னை.

3C
211, M22 MN
N29.87.
86536
SEP 1929

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசி..யரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

சந்திராபாய்

அல்லது

சங்கரதாஸின் வெற்றி

16 SEP 1929

ஸ்ரீமான் - ஆரணி குப்புசாமி முதலியார்
அவர்களால் இயற்றப்பட்டது

186536
சென்னை-600 008

சென்னை
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப் பெற்றது.
1929

ரிஜிஸ்டர்ட் காபி ரைட்] [விலை ரூபா 2-0-0.

அவன் தன் தேச உடையின்மேல் ஒரு நெடுஞ்சட்டையை யணிந்துகொண்டு தன் முகத்தை மறைக்க ஒரு பெரிய தொப்பியை முகத்தின் முன் சாய்த்து முகம் மறையும்படி யணிந்துகொண்டிருக்கிறுன். வண்டியும் வந்து பிரயாணிகள் இறங்கி வெளியில் வருகிறுர்கள். விஸ்வபுரியில் கடற்படையிலாகா உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் சங்கரதாஸ் அனுப்பிய டார்பிடோ படகைப்பற்றி ஆலோசனை செய்தார்களென்றும், அச்சமயம் சுருக்கெழுத்து அச்சடிக்கும் ஆள் அந்தமாதிரிப் படகை யெடுத்து சாளரத்தின் வழியாய் வெளியில் எறிந்ததாகவும், அன்னிய நாட்டு ஆட்களால் அமர்த்தப்பட்ட ஒரு கள்ளன் அங்கு சாளர வோரத்திலிருந்த செடிகளில் மறைந்திருந்து அப்படகை யெடுத்துச் சென்றுனென்றும் முன்பு கூறினேமல்லவா, அக் கள்ளனுகிய தன் ஆளுக்காகவே விபாங்கன் இப்போது வழிபார்த்துக்கொண் டிருக்கிறுன்.

அக்கள்ளன் தான் களவாடி வந்த பொருளை மிகப் பத்திரமாகவே மடியில் வைத்துக்கொண்டு வண்டியை விட்டிறங்கினுன். எதிரிகளில் யாரேனும் சந்தேகத்தால் நம்மை யெங்கு பிடித்துக் கொள்வார்களோ என்றபீதி இயற்கையாகவே யவனுக்கிருக்கிறது. அதோடு தனக்கு வேண்டிய ஆள் எங்கே வந்திருக்கிறுன் என்று ஒரு பக்கம் பார்த்துக் கொண்டே அவன் வருகிறுன். விபாங்கன் இருப்பதைப் பார்த்துவிட்டான்.

உடனே தன் மனக்கலக்கத்தை யடியோடடக்கிக் கொண்டு மிக்க சாமார்த்தியமாய்ச் சென்று விபாங்கன் நிற்குமிடத்தின் ஓரமாகச் சென்று தன்னிடமுள்ள சிப்பத்தை இரகசியமாய் அவன் கரத்தில் அளித்துவிட்டான். விபாங்கன் ஏதோ பராக்குப் பார்ப்பவன்போல் அபிநயம்

72
77211/N12.M41

செய்துகொண்டே அதை வாங்கித் தன் உட்சட்டைச் சேபியில் போட்டுக்கொண்டான். மறுவிநாடி இரண்டு கள்ளப் பயல்களும் ஒவ்வொரு மார்க்கமாய்ப் பிரிந்து சென்றார்கள்.

* * * *

இரண்டு கள்ளரும் ஏறிச்சென்ற வண்டியைத் தொடர்ந்து சென்ற சங்கரதாஸ் முதலியவர்கள் நெடுந்தூரம் சென்றபின் பாதை பிரியுமிடத்தில் சேர்ந்தார்கள். அங்கு சங்கரதாஸ் இறங்கி முன் சென்ற வண்டி எப்பாதையே சென்றதென்று பார்க்கவேண்டியது அவசியமாயிற்று.

சங்கரதாஸ் தன் துப்பறியும் சாமார்த்தியத்தால் கள்ளர் ஏறிச்சென்ற வண்டியின் சக்கரக்குறியை யறிந்துகொண்டிருக்கிறான். ஆகையால் அங்கு இறங்கிச் சோதித்துப் பார்த்ததும், அந்த வண்டிசென்ற திக்கை யறிந்துகொண்டதோடு அந்த வண்டி யங்கு நின்று பிறகு புறப்பட்டிருக்கிறதென்றும் அறிந்து கொண்டான். அதோடு அந்த இடத்திலிருந்து இரண்டுபேர் சற்று தூரத்திலிருக்கும் கடற்கரையை நோக்கிச்சென்ற காலடிகள் புலப்பட்டன. துப்பறியும் சாமார்த்தியமுடைய அவன் மனதில் உடனே பெரிய சந்தேகம் உதித்தது. அவன் இரகசிய இலாகா ஆட்களை நோக்கி "நீங்கள் வண்டிசென்ற வழியே போய்ப்பாருங்கள். நாங்கள் இன்னொரு வழியில் போய்ப்பார்க்கிறோம்" என்றான்.

அவர்கள் உடனே வண்டியிலேறிச் சென்றார்கள். சங்கரதாஸ் "வாதாஸிங்! வா. நாம் காலடிகளைப்பற்றிச் செல்வோம்" என்றான்.

41-வது அத்தியாயம்.

சங்கரதாஸனும் வரதாஸிங்கும் கள்ளர்களின் காலடிகளைப் பற்றிக்கொண்டு கடற்கரை யோரமே சென்றார்கள். காயம்பட்டவனும் அவன் நண்பனும் அதற்குள் கடற்கரை யோரத்திலுள்ள ஒரு இறங்குதுறை போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

கரையோரத்தில் ஒரு மறைவான இடமிருந்தது. அங்கு இருவரும் மறைந்து கொண்டார்கள். காயம்பட்டவனை யங்கு விட்டுவிட்டு மற்றவன் மட்டும் வெளிவந்து சமிக்கை காட்டுவதற்காக ஒருவிதப் புகையுண்டாக்க முயன்றான். இக்கள்ளர்களுக்குள் இத்தகைய இரகசிய ஏற்பாடுகளுண்டு. புகை கிளப்பினால் அந்த விடத்தில் நமது ஆள் ஒருவன் ஆபத்திலிருக்கிறான் என்று மற்ற சினக்கள்ளர்க ளறிந்து கொண்டு உதவிக்கு வருவார்கள்.

சங்கரதாஸனும் வரதாஸிங்கும் துரிதமாக நடந்து துறை யருகில் வந்து சேர்ந்தார்கள். சங்கரதாஸ் அங்கு வந்து நின்றதும் சுற்றுமுற்றும் பார்த்து "அதோ! அங்கு அவர்களிருவரும் இருக்கிறார்கள்" என்று புகை கிளம்பிய விடத்தைச் சுட்டிக்காட்டினான்.

வரதாஸிங் அத்திக்கை நோக்கியபோது இருவர் உருவங்களையும் கண்டான். டார்பிடோ படகைக் களவாடிக் கொண்டு சென்றவன் அந்த வேளைக்குள் இரத்தப்போக்கால் மிக்க பலஹீன மடைந்துவிட்டான். அவன்கூட விருப்பவன் புகைக்குறி காட்டும் வேலையில் அக்கரையாயிருக்கிறான். அவன் திரும்பிப் பார்த்தபோது சங்கரதாஸையும் வரதாஸிங்கையும் பார்த்துவிட்டான்.

உடனே தன் நண்பனிடம் சென்று "சமாளித்தெழுந் திரு. துப்பறிபவர்கள் நம்மைத் தொடர்ந்து வந்துவிட்டார் கள்" என்றான்.

காயமடைந்தவனால் நகரவும் முடியவில்லை. அவன் "என்னால் முடியாது. நீ போய்விடு" என்றான். ஆனால் அதற்குள் தான் என்ன காரியத்திற்காகச் சென்றதென்ப தும், என்ன செய்ததும் நினைவுவந்தது. அவன் தன் நண் பனை நோக்கி கரத்தைக்காட்டி அருகில் வாவென்று சமிக் கைசெய்தான்.

மற்றவன் கிட்ட வந்ததே காயமடைந்தவன் "நான் அந்த டார்பிடோ படகை யெடுத்துக்கொண்டேன். அதை ......அதை......கீழ்..." என்றதும் அவன் சிரம் சாய்ந்து விட்டது. பிராணன் போய்விட்டது. கூட்டாளி அவன் கூறுவதை யறிந்து கொள்ளலாமென்று மிக்க ஆவலோடு உற்றுக்கேட்டான். அதைக் கூறுவதற்குள் அவன் ஆவியே போய்விட்டதே. அதோடு சங்கரதாஸும் வரதாஸிங்கும் வருவதைக்கண்டான். ஆகையால் உடனே அங்கிருந்து ஓடிவிட்டான்.

மறுவிநாடி சங்கரதாஸும் வரதாஸிங்கும் அக்கள்ளர் ஒளிந்திருந்த இடத்திற்குச் சென்று நுழைந்தார்கள். சங்கா தாஸ் மடிந்தவன் பக்கத்திலுட்கார்ந்து அவனைச் சோதனை செய்யத் தொடங்கினான். வரதாஸிங் ஓடுகிறவனைத் துரத்திச் சென்றான்.

வரதாஸிங்குக்குச் சங்கரதாஸைப்போல் அப்பிரதேசத் தின் இடங்களெல்லாம் சரியாகத் தெரியாது. அவன் துரத் திச் செல்வதற்குள் அக்கள்ளன் அங்கிருக்கும் பல இரகசிய மான மறைவிடங்களில் எதிலோ ஒன்றில் மறைந்துகொண் டான். வரதாஸிங் தன்னாலானவரைத் தேடிப்பார்த்து வழி தவறிப்போய்க் கடைசியில் திரும்பிவிட்டான்.

வரதாஸிங் சங்கரதாஸிடம் வரும்போது சங்கரதாஸ் அவசரமாய் ஏதோ கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறான். வரதாஸிங் "சங்கரதாஸ்! அவனைக் கண்டுபிடிக்க என்னால் முடியவில்லை. நான் திரும்பிவிட்டேன்" என்று களங்கமின்றி யியம்பிவிட்டான்.

சங்கரதாஸ் "அடடா கெட்டவேளை - இருக்கட்டும். நீ யக்கள்ளனைப் பிடிக்க முயல். இன்று நான் உன்னைச் சந்திக்காமல் இருவரும் பிரிந்துவிட நேரின் இக்கடிதத்தை சந்திராபாயிடம் கொடுத்துவிடு" என்று தான் எழுதிய கடிதத்தை யவனிட மளித்தான். அச்சமயம் சங்கரதாஸின் முகத்தில் ஒருவிதமான கொடிய விகாரமுண்டாகி யிருந்தது. வரதாஸிங் அச்சமயம் அதைச் சரியாகக் கவனிக்கவில்லை. ஏனெனில் தான் அக்கள்ளனைப் பிடிக்காமல் வந்துவிட்டதால் அவன் மனதில் அதிக கலக்கமுண்டாகி யிருந்தது. அவன் சங்கரதாஸ் கொடுத்த கடிதத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டு கள்ளனைப் பிடிக்கச் சென்றான்.

சங்கரதாஸ் மறுநிமிடம் அங்கிருந்து புறப்பட்டுக் கடலோரம் சென்று அங்கு இறந்துகிடக்கும் கள்ளன் சவத்தை மறுபடி சோதித்தான். அவனுடைய அடையாளங் கண்டுபிடிக்க அவனிடம் ஒன்றும் அகப்படவில்லை. களவுபோன டார்பிடோ படகு மாதிரியும் அவனிடம் காணப்படவில்லை.

சங்கரதாஸ் நிமிர்ந்து ஒருபக்கம் நோக்கியதும் தட்டென்று தரையோடு தரையாய்க் கவிழ்ந்து படுத்துக்கொண்டான். ஏனெனில் அச்சமயம் விபாங்கன், விஸ்வபுரியிலுள்ள கடற்படையிலாகா காரியாலயத்திலிருந்து களவாடிக் கொண்டு வரப்பட்ட மற்றொரு மாதிரிப்படகைப் பத்திரமாக உள்ஜேபியில் வைத்துக்கொண்டு கடற்கரை ஓரமாக வந்து கொண்டிருக்கிறான். சங்கரதாஸ் அங்கிருந்த செடிகளின்

மறைவில் மெதுவாக நகர்ந்துகொண்டே ஒரு மூலையில் போய் பதுங்கினான்.

விபாங்கன் ஐயப்படாமல் ஓரமாகவே இறங்கு துறையருகில் வந்தான். அங்கு தன் ஆள் மடிந்திருப்பதைக் கண்டதும் மிக்க வியப்போடு குனிந்து நோக்கினான். அருகில் குறிகாட்டுவதற்காகப் போடப்பட்ட புகை யின்னும் பற்றியெரியாமல் புகைந்துகொண்டே யிருக்கிறதையும் கண்டான். அவன் ஒன்றுந் தோன்றாமல் குனிந்து சவத்தைச் சோதித்துப் பார்த்தான்.

சங்காதாஸ் யாவும் பார்த்துக்கொண்டிருந்து மெதுவாய் நகர்ந்து விபாங்கனிருக்கு மிடத்திற் கருகில் நெருங்கினான். சமீபத்தில் வந்து சங்காதாஸ் எழுந்திருக்கும்போது, மிக்க ஜாக்கிரதையுடைய சினக்கள்ளனாகிய விபாங்கன் எப்படியோ அன்னியர் வாசனை யுணர்ந்து தட்டென்றெழுந்து திரும்பினான்.

மறுவிநாடி இருவரும் ஒருவரை யொருவர் நோக்கினார்கள். தாங்கள் கொடிய விரோதிகளென்பது இருவர்க்கும் தெரியும். "சரி இப்போது இருவரும் நேரே தனியாகச் சந்தித்துவிட்டோம். இனி இருவரில் ஒருவர் ஒழிந்தாலன்றி விவகாரம் முடியப்போகிறதில்லை" என்று ஏககாலத்தில் இருவர் மனதிலும் பட்டது.

விபாங்கன் தன்னிடமிருந்த நீண்ட கத்தியை யெடுத்துக்கொண்டு சங்காதாஸ்மேல்பாய்ந்தான். சங்காதாஸ் தந்திரமாய் விலகிக் கத்திக்குத்துக்குத் தப்பித்துக்கொண்டு விபாங்கனைப் பற்றிக்கொண்டான். உடனே இருவரும் கட்டிப்புரண்டார்கள். அப்போராட்டத்தில் சங்காதாஸ் மிக்க சாமார்த்தியமாய் விபாங்கனிடமிருந்த டார்பிடோ படகின் மாதிரியைப் பிடுங்கிக்கொண்டான். அச்சமையம் இருவரும் பூமி

யில் புரள்கிறபடியால் அப்படகு அங்கிருந்த ஒரு பாறை மேல் போய் வீழ்ந்தது. உடனே ஒரு வெடிகிளம்பி அங் கிருந்த கல்லேயும் மணலேயும் நாற்புறங்களிலும் எறிந்தது.

அவர்களிருவரும் ஒருவரையொருவர் பிடித்தபிடி விட வில்லை. இருவர்க்கும் பயங்கரமான போராட்ட முண்டா யிற்று. விபாங்கன் கத்தியால் சங்கரதாஸைக் குத்திக் கொல்லப் பார்க்கிறான். சங்கரதாஸ் அதற்கு இடங்கொடா மல் அக்கத்தியைப் பிடுங்கிக் கொல்லப்பார்க்கிறான். ஒருவன் மற்றவனைக் கொன்றாலன்றி தப்புவதாய்த் தெரியவில்லை.

இருவரும் தரையில் புரண்டபடி போராடிக்கொண்டே இறங்கு துறையோரத்திற்குப் போய்விட்டார்கள். ஆச்சு ஜலத்தின் ஓரத்தையே நெருங்கிவிட்டார்கள். அப்போதும் இருவர்க்கும் பிராணாபத்தென்பதை யவர்கள் கவனிக்கவே யில்லை. கடைசியில் இருவரும் கடல் நீரில் உருண்டு விழுந் தார்கள். அப்போதும் பிராணனைக் காப்பாற்றிக்கொள் வோம் என்ற எண்ணமின்றி இருவரும் கடுமையான போராட்டத்திலேயே யிருக்கிறார்கள்.

நியாயமோ அநியாயமோ கோபத்தின் சுபாவம் அத் தகையதாக விருக்கிறது. விபாங்கன் சங்கரதாஸ் இவர்கள் இருவரில் விபாங்கன் அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் வாரி சாகத் தன் பிராணனுக்குத் துணிந்து போராடுகிறான். சங் கரதாஸ் பிறர்க்கு உதவிசெய்யவும், நீதியை நிலை நிறுத்தவும், துஷ்டரைப்பிடித்துத் தண்டிக்கவும் தன் பிராணனைத் திரண மாகக் கருதிப் போராடுகிறான்.

இவர்களில் யாருக்குக் கடவுள் உதவிசெய்வார் என்ற நம்பிக்கை யிருக்கும்? என்பதை யிதை வாசிப்போர் சிந் திக்கவேண்டும். ஏனெனில் அந்த நம்பிக்கை யுடையோர்க்கே ஜெயம் கிடைக்கும் என்பது உண்மை. அந்த நம்பிக்கை

யாருக்கிருக்கும்? பரிசுத்த உள்ளமும் நாம் நேர்மையான நீதிவழியே நடக்கிறோமென்ற மனசாட்சி யுடையவனுக்கு மட்டுமேயிருக்கும். இதன்படி கடலில் விழுந்து கட்டிப் போராடும் இருவரில் யார்கதி யெப்படியாகிறதென்பது பின்னால் வெளியாகும்.

* * * * *

ஓடிப்போன கள்ளனைத் தேடிச்சென்ற வாதாஸிங் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுக்கு எந்த வழி செல்வதென்ற நிதானம் தவறிவிட்டது. கடைசியில் நகர வோரத்தில் எங்கோ பாதையில் போய்ச் சேர்ந்தான். அச்சமயம் ஒரு வண்டிவரும் சத்தத்தைக் கேட்டுச் செடிகளில் மறைந்து நின்று பார்த்தான்.

வண்டியில் வரும் ஆட்கள் சங்காதாஸிடம் வந்த இரகசிய இலாகாவைச்சேர்ந்த ஆட்கள் இருவருமேயென்று தெரிந்தது. உடனே ஓடிப்போய் பாதையின் குறுக்கில் நின்று வண்டியை நிறுத்தும்படி சமிக்கை செய்தான். வண்டி யுடனே நின்றதும் இருவரும் இவனைக்கண்டதும் ஆவலோடு கீழே குதித்தார்கள்.

வாதாஸிங் அவர்களருகி லோடிக் கலவரத்தோடு,

"என்னோடு வாருங்கள். நாங்கள் அக்கள்ளர் இருவரையும் கண்டோம். ஒருவன் இறந்துபோனான். மற்றொருவன் தப்பியோடிவிட்டான். சங்காதாஸ் அவனைக் கண்டுபிடிக்கும்படி யென்னை யனுப்பினான். நான் என்னால் கூடிய வரையில் தேடிப்பார்த்தேன். அவன் எப்படியோ நழுவிவிட்டான். நீங்கள் இவ்விஷயத்தில் எனக்கு உதவி செய்யலாகும். தயவுசெய்து என்கூட வாருங்கள். நான் வழியை யிழந்துவிட்டேன். நீங்கள் அதைக் கண்டுபிடிக்கக்கூடும்' என்றான்.

அவர்களிருவரும் உடனே அவன் கூடப் புறப்பட்டு அங்கிருந்த செடிகளில் நுழைந்து கடலோரத்தை நோக்கிச் சென்றார்கள். ஏனெனில் சவம் இருக்கு மிடத்திற்கு இவர்களை யழைத்துப்போய்க் காட்டினால் இவர்கள் அங்கிருந்து ஓடிய மற்றொரு கள்ளன் சென்றவழியைக் காலடியால் சாமார்த்தியமாய்க் கண்டுபிடிப்பார்கள் என்பது வராஸிங் யோசனை.

இவர்கள் ஒரு புதரில் துரிதமாய் நுழையும்போது ஒரு வெடிச்சத்தங் கேட்டது. வராஸிங் "அதோ! அங்குதான் அங்குதான்" என்று வெடிச்சத்தம் கேட்ட திக்கை நோக்கிச் சுட்டிக் காட்டினான். அதன்பிறகு அவர்கள் அதென்னவென்றுகூடச் சிந்திக்கவேயில்லை. உடனே யொரே பாய்ச்சலாய் அந்த இடத்தை நோக்கி யோடினார்கள்.

அவர்கள் கடற்கரையோரம் சென்றதும் வெடியுண்டான குறிகளைக் கண்டார்கள். அந்தவிடத்தின் நாற்புறங்களிலும் நோக்கியபோது, வராஸிங் மிக்க கலக்கத்தோடும் ஆத்திரத்தோடும் "இதோ! இதோ! இதென்ன?" என்றான்.

உடனே மூவரும் அவன் காட்டிய இடத்தை நோக்கியபோது இருவர் போராடிய அடையாளம் தோன்றியது. அதைப் பற்றிக்கொண்டே சென்றபோது அது கரையோரமுள்ள இறங்கு துறையருகில் ஜலத்தின் ஓரம்வரையில் சென்றிருக்கிறது. அதைக்கண்டதே யவர்கள் பிரமித்து ஏக்கங்கொண்டு கடலை நோக்கினார்கள். நீரில் சமீபத்தில் குமிழ்கள் கிளம்பிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

வராஸிங்குக்கு நாவுலர்ந்துவிட்டது. ஆவி சோர்ந்து விடும்போலிருந்தது. கடலை யுற்று நோக்கினான். நுரை கிளம்பிய இடத்திலிருந்து எதுவோ ஒன்று மிதந்துகொண்டு வருவதுபோல் காணப்பட்டது. இவர்கள் பிரமிப்படைந்த

வர்கள்போல் அதை நோக்கியபடி யிருந்தார்கள். இரண்டொரு நிமிடங்களில் அது அலைகளால் கரையோரம் கொண்டு வரப்பட்டது.

வாதாஸிங் பாய்ந்துபோய் அதன் அருகில் நின்று பார்த்தான். அது ஒரு மனிதன் தேகம் என்றறிந்ததும் அதைப் பிடித்து கரையில் இழுத்தான். அது விபாங்கன் தேகம் என்று தெரிந்தது. அவன் மார்பில் அவனுடைய கத்தியே—கைப்பிடியில் விபாங்கன் குறியாகிய நாகக்குறி போடப்பட்டிருந்த கத்தியே-ஆழமாய்க் குத்தப்பட்டிருந்தது.

வாதாஸிங் கடலை யுற்றுநோக்கினன். அவன் மனதில் பலவிதக் கலக்கங்கள் உண்டாயின. சங்கரதாஸின் தேகமும் கடலில்தான் இருக்கவேண்டுமென்று கருதியவன் போல் கரையோரத்திலும், கண்களுக் கெட்டியவரையில் கடலிலும் பார்த்தான். எங்கும் ஒன்றும் புலப்படவில்லை.

கடைசியில் மனதை யடக்கமுடியாமல் "சங்கரதாஸ்! சங்கரதாஸ்!" என்று பன்முறை கூவினன். சந்தடியே யில்லை. இதற்குள் இரகசிய இலாகா ஆட்கள் விபாங்கன் தேகத்தைத் துறைமுகத்திற்குத் தூக்கிச் சென்றூர்கள். வாதாஸிங்குக்கோ அந்தவிடத்தைவிட்டுச் செல்ல மனம் துணியவில்லை.

நடந்த சம்பவங்களை நோக்கி "சங்கரதாஸும் விபாங்கனும் சந்தித்துப் போராடி யிருக்கவேண்டும். இருவரும் போராடிக்கொண்டே கடலில் போய்ச் சேர்ந்திருக்கவேண்டும். எத்தகைய பாதகத்திற்கும் அஞ்சாத படுபாவியாகிய விபாங்கன் தன் கத்தியால் சங்கரதாஸைக் குத்தமுயன்றிருக்கிறுன். சங்கரதாஸ் எப்படியோ சாமார்த்தியமாய் அக்கத்தியைப் பிடுங்கிக்கொண்டான். பிறகு அவனைக் கொல்லாவிட்டால் தான் இறப்பது நிச்சயம் என்று புலப்பட்டபிறகே

சங்கரதாஸ் இவன் கத்தியால் இவனையே கொன்றுவிட்டான்'' என்று இவ்வளவு விஷயமும் மின்னல்போல் வாதாஸிங்கின் புத்தியிற்பட்டது.

உண்மையில் சங்கரதாஸ் ஒரு கொலையாளியைக் கூடப் பிடித்துவந்து நியாயாதிபதியால் அவன் தண்டனை யடையும் படி செய்யும் சுபாவமுடையவனேயன்றி, தன் பிராணனுக்கு ஆபத்து நேர்வதாக விருந்தா லொழிய இன்னொருவரை யொருபோதும் கொலைசெய்யும் குணமுடையவனல்ல. தன்னைக்கொல்ல முயன்றவர்களைக்கூடத் தான் தப்பித்துக் கொள்ள வழியிருந்தால் அவன் கொல்வதில்லை.

வாதாஸிங் கடலில் என்ன பார்த்தும் சங்காதாஸின் குறியொன்றுமே புலப்படவில்லை. இதற்குள் இரகசிய இலாகா ஆட்கள் சமீபத்திலிருந்த இடத்திற்குச் சென்று பாதாளகொலுசு கொண்டுவந்து கடலில் துழாவிப் பார்த்தார்கள். ஒருபயனுமில்லை. வாதாஸிங்குக்கு நடப்பதெல்லாம் கனவுபோலிருக்கிறது. தான் காண்பதும் கேட்பதும் யாவும் பயங்கரமான கனவாகவே தோன்றுகிறது.

கடைசியில் அவர்கள் அங்கிருந்து திரும்பவேண்டியதாகவே முடிந்தது. அவர்கள் மூவரும் என்ன யோசனை செய்தும் ஒன்றும் புலப்படவில்லை. சங்காதாஸும் விபாங்கனுந்தான் அங்குப் போராடியவர்களென்று புலப்படுகிறது. அதுவும் நடந்த சங்கதிகளால் ஊகித்துக்கொள்ள வேண்டியதேயன்றி உண்மையென்று நம்புவதற்கில்லை.

இருவருமே சண்டையிட்டுக் கடலில் விழுந்து விபாங்கன் மடிந்துவிட்டிருந்தால் சங்காதாஸ் பிழைத்து வந்திருக்க வேண்டுமே. அவன் நீந்துவதில் நிபுணன். எப்படி யோசனை செய்தாலும் ஒன்றும் புலப்படவில்லை. எல்லாம் பெருந் திகிலாகவே முடிந்தது.

42 - வது அத்தியாயம்

வரதாஸிங் தன் வாசஸ்தலத்திற்குச் சென்று என்னென்னவோ ஆலோசனை செய்தான். ஒன்றும் புலப்படவில்லை. சங்கரதாஸ் சந்திராபாயிடம் கொடுக்கும் படி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறான். அதை யிப்போ தில்லாவிடினும் பிறகு எப்படியாயினும் கொடுத்தே தீர வேண்டும். இரவு நெடுநேரமட்டும் தன் வாசஸ்தலத்தில் சங்காதாஸுக்காக எதிர்பார்த்திருந்தான். சங்கரதாஸ் வரவில்லை. தன்னால் கூடியவரையில் ஆலசியம் செய்துபார்த்துக் கடைசியில் நெடுநேரங்கழிந்து சந்திராபாயின் வீட்டிற்குச் செல்லத் தொடங்கினான்.

வரதாஸிங் சந்திராபாயின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டியதும் ஜெகநாதன் வந்து கதவைத் திறந்தான். அவன் வரதாஸிங்கின் முகத்திலிருக்கும் விகாரத்தைக்கண்டதும் ஏதோ கெடுதி சம்பவித்திருக்கிறது என்று உணர்ந்து கொண்டு முகவாட்டத்தோடு வரதாஸிங்கை யுள்ளே யழைத்துச் சென்றான்.

ஜெகநாதன் அவனை சந்திராபாயும் ஜானகியம்மாளும் இருக்கும் புத்தகசாலை யறைக்கு அழைத்துச் சென்றான். சந்திராபாய் வரதாஸிங்கைக் கண்டதும் ஆவலோடு ஆசனத்திலிருந் தெழுந்து "அவர்களைப் பிடித்துவிட்டீரா?" என்றாள்.

வரதாஸிங் பாபம் என்னவென்று சொல்வான். அவன் மனம் பெருங் குழப்பத்திலிருக்கிறது. ஆதலின் முதலில் வந்தது, "ஆ! நான் கடைசியாகச் சங்காதாஸை விட்டுப்

பிரிந்தபோது அவன் உனக்குக் கொடுக்கும்படி யொருகடிதம் எழுதி யென்னிடமளித்தான்" என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தை யெடுத்து சந்திராபாயிடம் கொடுத்தான்.

வரதாஸிங் அதைத் தன்ஜேபியிலிருந்து வெளியில் எடுக்கும்போதே சந்திராபாய் ஆவலோடு அதைப் பிடுங்கிக் கொண்டு வாசித்தாள். அதில் கீழ்க்கண்டபடி யிருந்தது:—

"மிக்க அன்பார்ந்த சந்திராபாய்க்கு, இந்த விவகாரம் முடிவாகும் வரையில், களவுபோன டார்பிடோ படகின் மாதிரிகள் கண்டு பிடிக்கப்படுந்தனிலும் நான் திரும்பி வாராமலிருக்கலாகும். இதில் இலக்ஷக்கணக்கான மனிதரின் உயிர்களும் கோடிக்கணக்கான பொருளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. என்ன நேர்ந்தாலும் சரி. நீ பயப்படவேண்டாம். என்னைப் பூரணமாக நம்பியிரு.

இப்படிக்கு,

சங்கரதாஸ்.

சந்திராபாய் அதை இரண்டு மூன்றுதரம் வாசித்தபின் மெதுவாக மேஜைமேல் வைத்தாள். மறுபடி யதை யெடுத்தாள். மறுபடி வாசித்துப் பார்த்துவிட்டு அக்கடிதத்தை வரதாஸிங்கிடம் அளித்துவிட்டாள்.

அச்சமயம் சந்திராபாயின் முகத்தில் தோன்றிய நம்பிக்கையையும் தைரியத்தையும் பொறுமையையும் வரதாஸிங் இதுகாறும் இன்னொருவரிடம் இரண்டொரு விநாடி ஒன்றும் கூறமுடியாமல் பிரமிப்போடு விழித்தான். சந்திராபாய் அவனுடைய முகக்குறியைக் கண்டதும் தட்டென்று பேச்சை நிறுத்திவிட்டாள்.

பிறகு அவள் கலவரத்தோடு மேஜையைப் பிடித்துக் கொண்டு "என்ன சங்கதி?" என்றாள்.

வரதாஸிங் பக்குவமாய்த் தானும் சங்கரதாஸனும் அக் கள்ளரைத் துரத்திச் சென்றதும், அவர்களில் ஒருவன் மடிந்ததும், பிறகு மறுபடி தான் மற்றவனைத் துரத்திச் சென்றதும் அப்போது வெடிச்சத்தங் கேட்டுப் போய்ப் பார்த்ததும் கடற்கரையில் சண்டை நடந்த அடையாளங் கண்டதும், கடைசியில் விபாங்கன் மடிந்திருப்பதைக் கண்டதும் யாவும் மெதுவாய்க் கூறினன்.

இதன் முடிவைக் கேட்டதே சந்திராபாய் மூர்ச்சை யடைந்து விடுவாளென்றே வரதாஸிங் எண்ணினன். சந்திராபாய் "நீ அந்த இறங்குதுறை முழுதும் சரியாகப் பார்த்தாயா?" என்று கேட்டாள்.

வரதாஸிங் "எங்கும் பார்த்தோம். அந்த இரகசிய இல்லாகா ஆட்கள் பாதாள கொலுசு கொண்டுவந்துகூடக் கடலில் தேடிப்பார்த்தார்கள்" என்று மிக்க பீதியோடு ஜாடையாய்க் கூறினன். சந்திராபாய் மிரட்சியும் கோபமுமாகிய பார்வையாய் அவனை நோக்கினள்.

அச்சமயம் சங்கரதாஸ் கொடுத்த கடிதம் அவன் நினைவிற்கு வந்தது. சந்திராபாய்க்கு இவ்வித முகக்குறி யிருந்ததை அவன் நேரில் பிரத்தியட்சமாய் அவள் முகத்தைப் பார்க்காமலும் அவள் கூறியமொழிகளையும் கேட்காதிருந்து, அவள் அச்சமயம் அம்மாதிரி நடந்துகொண்டாள் என்று இன்னொருவர் அவனிடம் கூறியிருந்தால் அவன் எள்ளளவும் அதை நம்பியே யிருக்கமாட்டான்.

சந்திராபாய் அக்கடிதத்தை யவனிடம் கொடுத்தபின் சாந்தத்தோடும் நிதானத்தோடும் அவனை நோக்கி "அவர் நான் பயப்படவேண்டிய தில்லையென்றும் தன்னை நம்பி யிருக்கவேண்டுமென்றும் கூறுகிறார். அவர் இறந்து போனர்

என்று நான் நினைக்கவில்லை. அப்படி யாரேனும் கூறினும் நம்பமாட்டேன்" என்றாள்.

வரதாஸிங்குக்கு அவளுக்குத் தேறுதல் கூறவேண்டு மென்று மிக்க பிரியமே. முயன்றும் பார்த்தான் அவனால் வாய்திறக்க முடியவில்லை. விசனத்தோடு தலையைமட்டும் அசைத்தான். அவன் மனதில் அடக்க முடியாத் துயரமா யிருக்கிறது. அவன் எப்படி இன்னொருவர்க்குத் தேறுதல் கூறுவான்? ஆனால் அவன் மனதில் "அய்யோ பாபம்! பரிதாபமான பெண் நாம் கண்ட காட்சியை யவள் காண வில்லை. இவளும் நேரில் இருந்து பார்த்திருந்தால் இப்படி நம்பிக்கை கொள்ளமாட்டாள்" என்று தனக்குள்ளாகவே எண்ணிக்கொண்டு அவளைப் பார்த்தபடி யிருந்தான்.

வரதாஸிங் அவ்வாறு தன்மனதில் எண்ணிக்கொண் டாலும் சந்திராபாய் அவன் முகக்குறியாலேயே அவன் மனதிலிருப்பதை யறிந்துகொண்டு அவனை யுற்றுநோக்கி,

"இல்லை யில்லை. நான் ஆயிரந்தரம் கூறுகிறேன். சங்கர தாஸ் மடியவில்லை" என்று உறுதியாகக் கூறினாள்.

விபாங்கன் இறக்காதிருந்தால் அவனிடம் அகப்பட்ட அந்த டார்பிடோ படகைக்கொண்டு அவன் என்ன கெடுதி செய்திருப்பானோ சொல்லமுடியாது. அவன் மடிந்தொழிந் தான். ஆனால் அன்னியநாட்டு காரியஸ்தர்களில் மிக்க சாமார்த்தியம் பொருந்தியவனும் கொடிய துஷ்டனுமாகிய தில்லைமாரன் என்பவன் விபாங்கன் விட்ட இடத்திலிருந்து காரியத்தைத் தொடங்கிக்கொண்டான்.

---

43 - வது அத்தியாயம்.

சந்திராபாய், வரதாஸிங் முதலியவர்கள், சங்கரதாஸ் மடிந்தானே அல்லது உயிருடனிருக்கின்றானே என்னும் சந்தேகத்தால் மிகுந்த கலக்கத்துட னிருக்கும்போது, விபாங்கனுடைய பிரேதத்தை, வரதாஸிங்கும் மற்ற போலீஸ் காரரும் பார்த்துச் சங்கரதாஸைத் தேடிக் காணாமல் மன வருத்தத்துடன் திரும்பிவந்தபின், சிறிதுநேரத்திற் கப்பால், கடல்கரைக்கு இரண்டுமைல் தூரத்தில் ஒரு படகு போய்க் கொண்டிருந்தது. அதன் ஒருபக்கத்தில் ஒரு மனிதன் நனைந்த உடைகளுடன் இளைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். மற்றொருவன், தன் கைத் துப்பாக்கியை அவன் மார்புக்கு நேரே பிடித்தபடி, "நீ பேசி னாலும் அசைந்தாலும் உன் இருதயம் பிளந்துவிடும்'' என்று சொல்பவன்போல் விகாரமான பார்வையோடு நின்று கொண்டிருந்தான். மற்றொருவன் போட்டைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

இதனை வாசிக்கும் நண்பர்கள், இவர்களை யாரோ வென்று நினைக்கவேண்டாம். நனைந்த உடையோடு இளைத் துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவன் நமது சங்கா தாஸே; அவன் மார்புக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்த படி நின்றவன், விபாங்கனுடைய துஷ்டச்செய்கையை விட்டவிடத்திலிருந்து தொடர்ந்துகொண்ட அன்னியநாட் டுக் காரியஸ்தனான தில்லை மாரன் என்பவன்; தோணியைச் செலுத்தியவன் அவனைச் சேர்ந்தவன். விபாங்கனோடு சமுத்திர ஜலத்தில் கட்டிப் புரண்டுகொண்டு கிடந்த சங்கா தாஸ் இந்தப் படகில் எவ்வாறு வந்து சேர்ந்தான்? படகி

விருக்கும் அன்னியநாட்டார் இருவரும் அந்தப் படகுடன் அங்கே எப்படி வந்து சேர்ந்தார்கள்? சங்கரதாஸ் எவ்வாறு அவர்களிடம் அகப்பட்டான்? விபாங்கன் எதனால் பிரேதமாகிக் கரையில் ஒதுங்கினான் எனில், சங்கரதாஸ் விபாங்கனோடு சமுத்திரஜலத்தில் போராடும்போது, அவனிடமிருந்த தன்னுடைய டார்பிடோ மாதிரியொன்றைத் தான் கைப்பற்றிக்கொண்டதால், அதை, விபாங்கன் மீண்டும் பிடுங்கிக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணத்தால் சங்கரதாஸைப் பன்முறை கத்தியாற் குத்திக் கொல்ல முயன்றான். சங்கரதாஸ், 'நம் உயிரிருக்கும்வரையில் டார்பிடோ மாதிரியையிவனிடம் விடக்கூடாது' என்று ஆத்திரத்தோடு அவன் கத்தியால் குத்தும்போதெல்லாம் கையால் அதைத் தட்டித் தன் மற்றொரு கையால் அவன் மார்பில் குத்திக்கொண்டே வந்தான். முடிவில் விபாங்கன், 'இவனைக் கொன்றேவிடவேண்டும்' என்று ஆத்திரங்கொண்டு பல்லைக் கடித்தபடி கத்தியை மேலே தூக்கிச் சங்கரதாஸின் கழுத்துக்கு நேரே ஓங்கினான். சங்கரதாஸ் மிக்க ஜாக்கிரதையுடன், கத்தியோடு சேர்த்து அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அப்போது கத்தி தலைகீழாகத் திரும்பி அதன் முனை விபாங்கன் மார்பை நோக்கியபடி யிருந்தது. அப்போது விபாங்கன் தன் கையை கத்தியுடனே, சங்கரதாஸின் கைப்பிடியினின்றும் விடுவித்துக்கொள்ளப் பலங்கொண்டமட்டும் இழுத்தான். சங்கரதாஸும் அகப்பட்ட அவன் கையை விட்டுவிட்டால் தனக்கு மோசம் வருமென்று துணிந்து முழுப்பலத்துடன் இழுத்தான். இருவரும் உப்புத்தண்ணீரில் நனைந்திருந்தபடியால் அவ்வாறவர்கள் வேகங்கொண் டிழுக்கும்போது விபாங்கனுடைய கை, சங்கரதாஸின் கைப்பிடியினின்றும் கத்தியோடு நழுவிவிட்டது. அவ்வாறு நழுவினது தான் தாமதம் கத்திமுனை விபாங்கன் மார்புக்குநேரே

திரும்பியிருந்ததால் அவன் இழுத்தவேகத்தால் அவனுடைய கத்திபிடித்த கையே அம்புபோல் அவனுடைய மார்பிலேயே தடாலென்று தாக்கியது. அந்தோ! அவ்வாறு தாக்கவே அவன் கத்தியே அவன் மார்பில் பாய்ந்து ஊடுருவிவிட்டது. உடனே அவன் உயிர் துறந்தான்.

துஷ்டரை யொழிக்கவும், சிஷ்டரைப் பரிபாலிக்கவும் கருணைநிதியாகிய கடவுள் ஒருவர் இருக்கின்றாரன்றோ? இச் சம்பவம் அவருடைய திருவருட்செயலாலேயே நடந்தது. இவ்வாறு திடுமென நேர்ந்த சம்பவத்தைப் பார்த்தவுடனே சங்கரதாஸ் மிக்க ஆச்சரிய மடைந்தான்; எவ்வளவோ நெஞ்சுதிடுக்கிடத்தக்க பெரிய சாமர்த்தியமான செயல்களை யெல்லாம் செய்துவந்த அவன், தன் கைக் கத்தியினாலேயே மடியும்படியான சந்தர்ப்பம் நேர்ந்ததைப்பற்றிச் சங்கரதாஸ் கடவுளை வாழ்த்தினான். அச்சமையத்தில் அன்னியநாட்டுக் காரியஸ்தனாகிய தில்லைமாரன், ஒரு துணையாளுடன் படகைச் செலுத்திக்கொண்டு வேகமாக, சங்கரதாஸ் ஜலத்தில் மிதந்துகொண்டிருந்த விடத்திற்கு வந்தான். வந்ததும் ஆவலோடு விபாங்கனைத் தூக்கிப் பார்த்தான். அவன் பிரேதமா யிருப்பதைப் பார்த்ததே அவன் சட்டப்பைகளை நன்றாகச் சோதித்துப் பார்த்தான். ஒன்றும், அப்பைகளில் அகப்படவில்லை. உடனே முகவாட்டத்துடனும், வெறுப்புடனும் அவனைத் தண்ணீரிலேயே வீசி யெறிந்துவிட்டுச் சங்கரதாஸைத் தூக்கிப் படகிலேற்றி அவன் உயிருடனிருப்பதைக் கண்டு மிக்க கோபத்தோடு, கைத்துப்பாக்கியை அவன் மார்புக்கு நேரே பிடித்துக்கொண்டு, "பத்திரம்! ஏதாவது சேஷ்டைசெய்தால் உன் ஆவி போய்விடும்" என்று சொல்லி நடுச்சமுத்திரத்தை நோக்கிப் படகைச் செலுத்திக்கொண்டு போனான். அவன் மேற் கூறியபடி விபாங்கன் பிரேதத்தை எறிந்துவிட்ட பின்னர்தான் அது அலைகளால் ஒதுக்கப்பட்

டுக் கடற்கரையோரம் சேர்க்கப்பட்டு அதனை வரதாஸிங் முத லியவர்கள் கண்டார்கள். சங்கரதாஸை அவன் மேற்கூறிய படி படகில் ஏற்றிக்கொண்டு போய்விட்டதனுல்தான் அவர் கள் அவனைக் கண்டுபிடிக்கக்கூடாமல் மயங்கினுர்கள்.

இனி, அன்னியநாட்டுக் காரியதரிசியாகிய தில்லைமாரன், ஏன் அங்கே படகைச் செலுத்திக்கொண்டுவந்து இத்தகைய காரியங்களை ஏன் செய்தான்? அவனுக்கும் இவர்களுக்கும் என்னசம்பந்தம்? எனில், முன்னே விபாங்கன், சங்கரதாஸ் கண்டுபிடித்த டார்பிடோ படகுடன் அவனை அன்னியநாட்டு இராஜாங்கத்தாருக்குப் பிடித்துக் கொடுத்துவிடுவதாக ஒப் புக்கொண்டுவந்து, தன் ஆளைக்கொண்டு அந்த டார்பிடோ வின் மாதிரி யொன்றைக் கைப்பற்றச்செய்து, தான் சங்கர தாஸிடம் சூடுபட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட் டுப் பிரேதம்போற் கிடந்து பாசாங்குசெய்து சீனுக்காரர் மூலம் வெளியேறித் தப்பித்துக்கொண்டு வந்தபின், முன்னே திருடப்பட்ட டார்பிடோ மாதிரியைக் கொண்டுபோன ஆளுக்குச் சமாச்சாரம் தெரிவித்து ரெயில்வேஸ்டேஷனுக் குக் கொண்டுவரச் செய்துவிட்டு சங்கரதாஸிட மிருந்த மற் றொரு மாதிரி டார்பிடோ படகைக் கைப்பற்றிக்கொண்டு சமுத்திரக்கரைக்கு வரும்படிக்கு இரண்டு கள்ளரை யனுப்பி விட்டு, அந்த இரண்டையுமே தான் கைப்பற்றிக் கொண்டு வந்து அந்தச் சமுத்திரக்கரை யோரத்தில் சேர்ப்பதாகவும், அவற்றை வாங்கிச் செல்வதற்காகத் தனக்குத் தெரிந்த ஆட் களைப் படகுடன் அனுப்பவேண்டுமென்றும் அந்நியநாட்டுக் கடற்படைக் கப்பல் தலைவர்க்குச் சொல்லி ஒரு ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அந்த ஏற்பாட்டின்படியே அத் தலைவர், விபாங்கனுக்குத் தெரிந்தவனுகிய தில்லைமாரனைப் படகுடன் அனுப்பியிருந்தார். அவன் படகிலேறி வந்து சமுத்திரத்தில் தூரத்திலிருந்தபடியே விபாங்கனைத் தேடி

ளுன். அப்போதுதான், விபாங்கன், ரெயில்வே ஸ்டேஷனில் முந்தின திருடன் கொண்டுவந்து கொடுத்த டார்பிடோ மாதிரியை எடுத்துக்கொண்டு, சங்கரதாஸிடம் சந்திராபாய் வீட்டில் இருவரால் திருடிவரப்பட்ட மற்றொரு டார்பிடோ மாதிரி கிடைக்குமென்று சமுத்திரக்கரையோரம் வந்து இறந்துகிடந்த திருடனிடம் அஃதிருக்குமென்று அவனைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்து சங்கரதாஸைக் கண்டு அவனோடு சண்டைபோட்டுக் கடல்ஜலத்தில் புரண்டுகொண்டிருந்தான்.

அவ்விருவரும் சமுத்திர ஜலத்தில் புரண்டு புரண்டு சண்டைபோடுவதை, முந்தியே படகுடன் விபாங்கனைத் தேடிக்கொண்டிருந்த தில்லேமாரன் கண்டு, அவர்கள் தன்னுடைய காரியத்தில் சம்பந்தப்பட்டவர்களாகவே யிருக்கக் கூடுமென்று நினைத்து அவர்கள் சமீபத்தில் படகைச்செலுத்திக்கொண்டு வந்தான். அப்படி நெருங்கிவந்து, சண்டை போடுகின்றவர்கள் விபாங்கனும் சங்கரதாஸு மென்று தெரிந்தவுடனே, அவன், "ஓகோ! விபாங்கன், எப்படியோ சங்கரதாஸை டார்பிடோ மாதிரிகளுடன் கொண்டுவந்து விட்டான்; சங்கரதாஸ் அவனுடன் எதிர்த்துச் சண்டை போடுகிறான்; நாம் விபாங்கனோடு சேர்ந்து சங்கரதாஸை ஒடுக்கிப் பிடித்துக்கொள்ளவேண்டும்" என்று இன்னும் சற்று நெருங்கினான். அப்போதுதான் விபாங்கன் பிணமாய் மிதந்தான். தில்லேமாரன் அவனைத் தூக்கிப் பார்த்தான்; அவன் இறந்துவிட்டானென்று தெரிந்தவுடனே அதிருப்தியடைந்தான். அதனாலேயே அவனை ஜலத்தில் எறிந்துவிட்டான். அப்படி யெறிந்தும் சங்கரதாஸ் உயிரோடிருந்தபடியால் அவனைப் பிடித்துக்கொண்டால் ஒருசமயம் அந்த டார்பிடோக்களின் மாதிரிகள் அவனிடம் அகப்படக்கூடுமென்றும், அப்படி அகப்படாவிட்டாலும் அவனையாவது

சிறைப்படுத்திக்கொண்டு போகலாமென்றும் நினைத்து அவனைத் தூக்கி அவ்வாறு படகிலேற்றிக்கொண்டு போனான்.

மேற்கூறியபடி சங்கரதாஸை, தில்லைமான் படகிலேற்றிக்கொண்டு போகுங்காலத்தில், சங்கரதாஸ், தில்லைமானைப் பற்றி, 'இவன் ஏன் நம்முடைய விஷயத்தில் தலையிட்டான்?' என்று யோசித்தான். அவன், அன்னியநாட்டரசாங்கத்தைச் சேர்ந்தவனென்றும், டார்பிடோ படகைக் கைப்பற்றித் தருவதாக அவனை, விபாங்கன் வரச்சொல்லியிருப்பானென்றும், அதனாலேயே அவன் வந்து விபாங்கன் இறந்ததைக் கண்டு, தன்னிடமாவது அந்த டார்பிடோ மாதிரிகள் அகப்படக்கூடுமென்று தன்னைப் பிடித்துக்கொண்டு போகின்றானென்றும் தெரிந்துகொண்டான். உடனே அவனுக்குத் திகிலுண்டாயிற்று. அதனால், அவன், "இவன் நம்மை விடாமல் அன்னியநாட்டு இராஜாங்கத்தாரிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவான். அவர்கள், அந்த டார்பிடோ மாதிரியை நம்மிடமிருந்து கைப்பற்ற முயல்வார்கள். அது அகப்பட்டாலும் நம்மை விடமாட்டார்கள். சிறைப்படுத்துவார்கள் அல்லது கொன்றுவிடுவார்கள். இப்பொழுது அந்தமாதிரியில் நம்மிடம் ஒன்றிருக்கின்றது; அந்தத் திருடனிடம் அகப்பட்ட மற்றொன்று இருக்குமிடம் தெரியவில்லை. இவை எப்படிப்போனாலும் நாம் அகப்பட்டுக்கொண்டவரையில் நம்மிடமிருந்து அந்த டார்பிடோ விவரத்தைத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப்படுவார்கள்; அதனால் நமக்கு மிக்க துன்பமே நேரும்; அல்லது உயிர்ச்சேதமுண்டாகும்; இனி இவர்கள் கையினின்றும் தப்புவதற்கு எவ்வித மார்க்கமுமில்லையே; நிராதரவாய்க் கடல்தண்ணீரில் நாம் மிதந்துகொண்டிருக்கின்றோம்; இதில் என்ன உபாயம் நமக்கேற்படப்போகின்றது" என்று பலவிதமாக நினைத்தான். எனினும் தைரியத்தை விடவில்லை. "கடவுள் நிரபராதிகளைக் காப்

பாற்றுவார்; ஏதேனுமொருமார்க்கமேற்படாமல் போகாது; எதற்கும் தைரியத்தை விடலாகாது" என்று ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

அப்படி யிருக்கும்போது தில்லைமாரன் சங்கரதாஸை சோதிக்கத்தொடங்கி, அவன் சட்டைப் பைகளை ஆராயத் தொடங்கினான். அப்போது விபாங்கனிடமிருந்து சங்கரதாஸ் பிடுங்கிக்கொண்ட டார்பிடோ மாதிரி யொன்று தில்லைமாரனிடம் அகப்பட்டது. அவன் அதை யெடுக்கும்போது தடைசெய்வதிற் பயனில்லையென்று, சங்கரதாஸ் பேசாமலிருந்துவிட்டான். தில்லைமாரன் மற்றொன்று எங்கேயென்று அவனிடம் கேட்டான். சங்கரதாஸ், "விபாங்கனுடைய ஆள் அதை என்னிடமிருந்து திருடிக்கொண்டு வந்தான்; அஃதென் கைக்கு அகப்படவில்லை" என்றான். தில்லைமாரன், "இவனே நம் கையில் சிக்கியிருப்பதால் இனி அதைப் பற்றக் கவலை யடையவேண்டியதில்லை; இவனிடம் அதன் விவரத்தைத் தெரிந்துகொள்ளலாம்" என்று பேசாம லிருந்துவிட்டான். அன்னியநாட்டுக் கடற்படைக் கப்பல் ஒன்று, கடலில் ஐந்தாறுமைல் தூரத்துக் கப்பால் நின்றுகொண்டிருக்கிறது. அந்தக் கப்பலி லிருந்துதான் தில்லைமாரன் அனுப்பப்பட்டான். ஆதலின், அவன், அந்தக் கப்பலுக்கே சங்கரதாஸைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்பொருட்டு படகை வேகமாகச் செலுத்திக்கொண்டு போனான். கப்பல் நிற்பது சங்கரதாஸின் கண்ணுக்குத் தெரிந்தது. கப்பலுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டால், தான் தப்பமுடியாதென்பது சங்கரதாஸுக்குப் பூரணமாகத் தெரிந்தது. அதனால் சங்கரதாஸின் புத்தி மிகச் சுறு சுறுப்பாக வேலைசெய்யத் தொடங்கிற்று. என்னசெய்தும் பயனில்லை. தன்நெஞ்சுக்கு நேராகத் தில்லைமாரன் கைத்துப்பாக்கியை நீட்டியபடியே யிருக்கின்றான். கொஞ்சம் அசைந்தாலும் சேஷ்டைசெய்யத் தொடங்

கினுலும் சுட்டுக் கொன்றுவிடுவான். எங்கும் ஜலமாயிருப்ப தால் வேறெந்தத் தந்திரமும் செய்வதற்குச் சங்கரதாஸினுல் முடியாது. ஆதலின், அவன் மனக்கலக்கத்தோடு ஏதேதோ யோசித்துக்கொண்டிருந்தான். ஆச்சு கப்பலுக்கு இரண்டு மைல் தூரத்தில் படகு நெருங்கிவிட்டது. படகு, கப்பலுக் குச் சமீபத்தில் நெருங்க நெருங்கச் சங்கரதாஸனுக்கு திகில் அதிகமாகின்றது. முடிவில் அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தில்லேமாரனிட மிருக்கும் கைத்துப்பாக்கியைப் பிடுங்கிக்கொள்ளலாமாவென்று துணிந்தான்.

அத்தருணத்தில் அப்படகிலிருந்த மூவரும் திடுக்கிடும் படி, அப்படகின் ஓரத்தில் பெரிய நீர்க்கொந்தளிப் புண்டா யிற்று; ஒரு பெரிய மரத்தால் நீரின்மேல் அடிக்கப்படுவது போன்ற சப்தமும் தோற்றமும் உண்டாயின. அதேநிமி ஷத்தில் ஒரு பெரிய உருவம் தலையை நீரின்மேற் கிளம்பிப் படகின் மேற்பாகத்தில் நீட்டித் தில்லேமாரன் கழுத்தைப் பற்றி பிழுப்பதுபோலிருந்தது; மறுநிமிடம் தில்லேமாரன் படகிலிருந்து நழுவி நீருக்குள் மூழ்கிவிட்டான். அவன் படகிலிருந்து சாயும்போது அவனுடைய கைத் துப்பாக்கி சங்கரதாஸின் முன்னே அவன் கைப்பிடியினின்று நழுவி வீழ்ந்துவிட்டது. ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்காமலும், சிறி தும் யோசிக்காமலும், நடந்ததென்னவென்று சிந்திக்காம லும் வெகு துரிதமாய்ச் சங்கரதாஸ் அத்துப்பாக்கியை யெடுத்ததும் கண்மூடித் திறப்பதற்குள் படகை ஓட்டிக் கொண்டு சென்ற மற்றொரு மனிதனைச் சுட்டு வீழ்த்திவிட் டுத் தன் கையாலேயே அந்தப் படகை வந்தவழியே திருப்பி வேகமாக ஓட்டினுன். புத்தி பிரமிக்கத்தக்க ஏதோ ஒரு சம் பவம் நிகழ்ந்த இச்சமையத்திலும் சங்கரதாஸ் கலவரப்படா மல் வெகு ஜாக்கிரதையாகத் தனக் கனுகூலமானதைச் செய்துகொண்டான். இப்படிப்பட்ட சமயங்களில் இவ்

வாறு துணிச்சலாகக் காரியம் நடத்துவது அவனுடைய அபூர்வசாமர்த்தியச் செயல்களில் மிகவும் அதிசயிக்கத் தக்கது.

இங்கே நடந்த விஷயம் என்ன? நல்லோர்க்குத் துணை புரிய எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய கருணையங்கடவுள் ஒருவர் இருக்கின்றாரன்றோ? அவருடைய அற்புதச் செயலை யாரறியவல்லார்? சங்கரதாஸ் இனி எப்படித்தப்பலாமென்று மனங்கலங்கி முடிவில் தில்லைமாரன்மேல் பாய்தற்குத் துணிவுகொண்டசமயத்தில், அந்தப் பிரதேசத்தில் மிகுந்த பசியோடு இரைதேடித்திரிந்த பிரமாண்டமான சுருமீனொன்று அந்தப் படகையும், அதில் ஆட்கள் இருப்பதையும் தூரத்தில் திரிந்தபடியே பார்த்துக்கொண்டு மெதுவாகத் தில்லைமாரனுக்குப் பின்பக்கத்தில் வந்து அவன்மேற் பாய்ந்து கழுத்தைப் பிடித்திழுத்துக்கொண்டு நீருக்குள் மூழ்கிவிட்டது. இப்படிவந்து பாய்ந்து அவனைப்பற்றிச் சென்றது சுருமீனென்றே சங்கரதாஸ் அந்தக் கலவரத்திலும் சூக்ஷ்மமாக உணர்ந்துகொண்டான். அதனால்தான், 'இப்பொழுது விரைவாக வேலைசெய்யவேண்டு' மென்று கீழே வீழ்ந்த துப்பாக்கியை யெடுத்துப் படகைச் செலுத்திய ஆளையும் சுட்டு வீழ்த்தினான். இது தெய்வச்செயலால் நேர்ந்தது. சங்கரதாஸ் இந்த ஆபத்தினின்றும் நீங்கிக் கடற்கரையை நோக்கிப் படகைச் செலுத்திக்கொண்டு போகும்போதே, இந்திரபுரிக் கோட்டையிலிருந்து நடுக்கடலை நோக்கிப் பீரங்கிகள் சுடும் சப்தம் கேட்டது. உடனே நடுக்கடலில் சங்கரதாஸைக் கொண்டுபோகவந்து கடலில் காத்துநின்ற கப்பல் உடைந்து மூழ்கிவிட்டது. அதிலிருந்த எதிரிகளெல்லோரும் கடலுக் கிரையானார்கள். இச்சம்பவம் எப்படி நேர்ந்ததெனில், டார்பிடோ மாதிரி காணமற் போனதும், சங்கரதாஸ் காணமற் போனதும் இந்திரபுரியெங்கும்

பரவிவிட்டன. உள்நாட்டு இராஜாங்கத்தார் சங்கரதாஸைத் தேடினார்கள். அவன் அகப்படவில்லை. அதனால் அவன் இறந்துபோய்விட்டானென்றே தீர்மானித்து, அன்னிய நாட்டுக் கப்பல்வந்து கடலில் உலவுவதாகக் கேள்விப்பட்டுக் கோட்டையிலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்துக் கொண்டிருந்து அந்தக் கப்பலைக் கண்டுவிட்டார்கள். கண்டவுடனே ஆத்திரங்கொண்டு பெரிய பீரங்கிகளால் சுட்டார்கள். அதனாலேயே அக்கப்பல் நாசமாயிற்று.

---

44 - வது அத்தியாயம்.

சங்கரதாஸ், நில்லைமாரன் ஒழிந்தபின் அவன் கூட இருந்தவனையும் சுட்டுத் தள்ளிவிட்டுக் கரைநோக்கிச் சென்றதற்கு மறுநாள் காலை 9-மணிக்குச் சந்திராபாயின் வீட்டில் வரதாஸிங்கும், அவனுடன் அன்றைக்கு டார்பிடோ மாதிரியைக் கவர்ந்து சென்ற திருடருள் இறந்தவன்போக ஓடிய மற்றொருவனைப் பிடிக்கச்சென்ற இரகசிய இலாகாவைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களும், சந்திராபாய் முதலியவர்களும்கூடிச் சங்கரதாஸ் காணாமற்போன விஷயத்தைப்பற்றிப் பரிதாபமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அத்தருணம் அவர்களிருந்த அறைக்குள் ஒரு ஆள்வரும் சந்தடி கேட்டது. உடனே எல்லோரும் அவ்வறையின் வாயிற்பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். சங்கரதாஸே உள்ளே வருகிறான். அங்குக்கூடியிருந்தவர்களுக்கு உண்டான ஆச்சரியம் அளவில்லை. உடனே அவர்களுடைய முகத்தில் ஒரு வித பிரகாசம் உண்டாயிற்று. எல்லோரும் எழுந்து சங்கரதாஸைத் தனித்தனியே கட்டித் தழுவிக்கொண்டார்கள். சங்கரதாஸ், வேர்வையைத் துடைத்துக்கொண்டு ஆசனத்

தில் உட்கார்ந்தான். சந்திராபாய் மிக்க ஆவலோடு அவனை நோக்கி, "ஐயோ! உமக்கு நேர்ந்ததென்ன? இங்குள்ள எல்லோரும் நீர் இறந்துபோய்விட்டதாகவல்லவா நினைத்தார்கள்!" என்றாள். சங்கரதாஸ், "ஆம்; நான் இறந்துபோனவனே; தெய்வசகாயத்தால் மீண்டும் பிழைத்தேன்" என்று தான் தில்லைமாரனிடம் சிக்கி மீண்டுவந்த விவரங்களையெல்லாம் சொன்னான். சந்திராபாயும், வரதாஸிங் முதலியவர்களும் எதிரிகள் ஒழிந்ததற்குச் சந்தோஷமும், சங்கரதாஸ் அடைந்த அவஸ்தைகளுக்கு மனத்துயரமும் அடைந்தார்கள். அதன்மேல் சந்திராபாய் சங்கரதாஸை நோக்கி, "நீர் நேற்றுப்பின்னிரவே கடற்கரைவந்து சேர்ந்திருக்கக்கூடுமே; இதுகாறும் இங்கேவராமல் என்னசெய்துகொண்டிருந்தீர்? எங்குச் சென்றிருந்தீர்?" என்று வினவினாள். அதற்குச் சங்கரதாஸ், "நான் கரைவந்து சேர்ந்ததும், 'எதிரிகளிருப்பதனாலல்லவா நமக்கும் நம்நேயருக்கும் மேலும் மேலும் துன்பங்கள் விளைந்துகொண்டே யிருக்கின்றன; இப்பொழுதோ எதிரிகளில் கெட்டிக்காரர்களா யிருந்தவர்க ளெல்லோரும் ஒழிந்தார்கள்; அவர்களைச் சார்ந்தவர்களில் சாமானியமான சிலரே யிருக்கின்றனர்; அவர்களையும் ஒழித்துவிட்டால் நாம் எவ்வித இடையூறுமின்றி யிருக்கலாம்; இராஜாங்கத்திற்குதவியான பெருங்காரியங்களில் புத்திசெலுத்தி அனுகூலமானவற்றைச் செய்துமுடிக்கலாம்; என்னிடமிருந்த டார்பிடோ மாதிரியொன்று, தில்லைமாரனோடு சமுத்திரத்தில் மீன் வயிற்றுக்குள் மறைந்துவிட்டதால் அஃதினிமேல் அன்னிய இராஜாங்கத்தாரிடம் சிக்க ஏதுவில்லை. மற்றொன்று இங்கிருந்து எடுத்துப்போன திருடன் இறந்துவிட்டதால் அஃதிருக்குமிடம் தெரியவில்லை. அவனோடு கூடியிருந்து அவன் இறந்த சமையத்தில் எங்களைக்கண்டு பயந்தோடிப் போன மற்றொரு திருடனிடமிருந்தாலு மிருக்கக்கூடும்.

ஆதலின் அவனையும் பிடித்துக்கொண்டால் அதன் இரகசியத்தைத் தெரிந்து அதையும் எதிரிகளிடம் அகப்படாமற் செய்துவிடலாம்; அவ்வாறு அன்னிய இராஜாங்கத்தாரிடம் மாத்திரம் அந்த டார்பிடோ மாதிரிகள் அகப்படாமற் செய்துவிட்டால், பின்னுல் நம்முடைய இராஜாங்கத்தாருக்கு வேறுமாதிரி வேண்டுமானுலும் தயாரித்துக் கொடுத்துவிடலாம்; ஆதலால், எஞ்சியிருக்கும் எதிரிகளைச் சிறைசெய்து விஷயங்களை ஒருமுடிவிற்குக் கொண்டுவராமல் இனி நாம் வேறு வேலைசெய்யக்கூடாது' என்று ஒரு ஆத்திரம் எனக்குண்டாயிற்று. அதனுல் வந்தவுடனே அவ்வேலையிற் பிரவேசித்து நேற்றிரவே போலீஸ் அதிகாரிகளைக் கண்டு அவர்களின் உதவிபெற்று விடிந்தவுடன் திருடர் கூட்டத்தாரைத் தேட ஆரம்பித்தேன். நேற்று டார்பிடோப் படகின் மாதிரியைத் திருடிச் சென்றவனேடிருந்து சமுத்திரக்கரையில் மறைந்தோடிப்போன திருடன் அகப்பட்டான்; அவனிடம் அம்மாதிரிப்படகு அகப்படவில்லை. அவன் வாக்குமூலத்தாலும் வேறு சில காரணங்களாலும் இறந்துபோனவனிடத்திலிருந்தே அது எங்கேயோ நழுவிவிட்டதாகத் தெரிந்துவிட்டது. அஃதெப்படிப் போனுலும் அன்னிய ராஜாங்கத்தாரிடத்தில் மாத்திரம் அகப்படவில்லையென்பது உறுதிப்பட்டுவிட்டது. அதனுல், எனக்கு மிக்க திருப்தியுண்டாயிற்று. பின்னர் சிறிதுநேரம் வேலைசெய்ததில் விபாங்கனைச் சேர்ந்த நாகம்மாள் முதலிய யாவருமே அகப்பட்டுக் கொண்டார்கள். இது தெய்வச்செயலே; எத்தனையோமுறை தீவிரமுயற்சிசெய்தும் அகப்படாதிருந்த அவர்கள் மிகச் சுலபத்திலேயே சிறை செய்யப்பட்டார்கள்; இப்போதுதான் என்னுடைய வேலை பூரணமாக முடிவுக்கு வந்தது. உடனே நான் இங்குவந்து சேர்ந்தேன்" என்றுன்.

இவற்றையெல்லாம் கேட்டதும் சந்திராபாய் முதலிய வர்கள் ஆனந்தக்கடலில் மூழ்கினார்கள். இந்தச் சந்தோஷத் திற் கறிகுறியாக சந்திராபாயால் அன்று எல்லோருக்கும் விருந்து நடத்தப்பட்டது. சில தினங்கள் சென்று, விபாங்கன் கூட்டத்தைச் சேர்ந்த சங்கு, நாகம்மாள், வேறு சில சைனுக்காரர்கள் முதலியவர்கள், நியாயாதிபதியால் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் செய்த குற்றங்கள், தக்க ஆதாரங்களோடு ருசுவாயின. சங்கும், நாகம்மாளும் மாணதண்டனை விதிக்கப்பட்டார்கள். மற்றவர்கள் தீடாந்தாசிக்ஷை விதிக்கப்பெற்றார்கள். இந்திரபுரியில் போக்கிரிகள் கூட்டமெல்லாம் அடியோடொழிந்தது. நகரமெங்கும் திருடர் கூட்டத்தாரின் தொந்தரவு சிறிதுமில்லாதிருந்தது. அதனால், அங்குள்ள ஜனங்களெல்லோரும் சங்கரதாஸை மிகவும் கொண்டாடினார்கள். அன்று முதல், சங்கரதாஸ், வரதாசிங், சந்திராபாய், ஜானகியம்மாள் முதலியவர்களுக்கு மனோநிம்மதி யேற்பட்டது. எல்லோரும் கவலையற்றுத் தங்கள் தங்கள் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

———

45 - வது அத்தியாயம்

சங்கரதாஸ், தான் கண்டுபிடித்து இழந்துபோன டார்பிடோவை மீண்டும் கண்டுபிடித்து இராஜாங்கத்தில் நன்கு மதிப்பை பெறவேண்டுமென்று, தன்னுடைய இரசாயனசாலையில் அதிக ஊக்கமாக வேலைசெய்துவந்தான். அக்காலத்தில் ஒருநாள் மாலைநேரத்தில் சங்கரதாஸ் சந்திராபாயைப் பார்க்கச் சென்றான். இருவரும் சந்திராபாயின் மாளிகைக்குப் பின்புறமுள்ள தோட்டத்தில் உலவச்சென்றார்கள். நல்லஜாதி விருக்ஷங்களிலும் செடிகளிலும் உள்ள மலர்கள் கண்ணுக்கினிமையாக மலர்ந்து நறுமணம் வீசிக்கொண்டிருந்தன. இளந்தென்றற் காற்றானது இன்பமும், குளிர்ச்சியும் மிக அசைந்துகொண்டிருந்தது. அழகிய பல வர்ணப்பக்ஷிகள் இனிய குரலோசையைச் செய்துகொண்டிருந்தன. அத்தோட்டத்தின் அமைப்பானது எவர்க்கும் எத்தகைய விசனத்தையும் மாற்றி இன்பத்தை யுண்டாக்கக் கூடியதாயிருந்தது. சிறிதுதூரம் சென்றவுடன், சந்திராபாயும், சங்கரதாஸும் ஒரு மகிழமரத்தினடியில் சலவைக் கல்லால் அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தார்கள். அப்போது சங்கரதாஸ் சந்திராபாயை நோக்கி,

"இப்போது உன்மனம் கலவரமற்ற நிலையிலிருக்குமென்று நான் நினைக்கிறேன்; இனி எப்போதும் சந்தோஷமாகவே யிருக்கக்கூடும்" என்றான்.

சந்திராபாய் :—கொடிய பாவிகளெல்லாம் ஒழிந்தார்கள்; அதனால் இனி மனதிற்கு ஒருவாறு கலக்கமிராது; ஆனால், என்னுடைய மனதிற்குச் சந்தோஷமுண்டானதற்குக் காரணம் நீராகவே யிருக்கின்றீர்.

சங்கரதாஸ்:—என்னாலானது ஒன்றுமில்லை; எல்லாம் கடவுள் செயலே.

சந்:—கடவுள் கிருபையினாலேயே யாவும் நடந்தனவெனினும் அவருடைய செய்கை ஒவ்வொன்றுக்கும் நீர் துணைக்கருவியா யிருந்திருக்கின்றீர். உம்முடைய துணையில்லாவிடின் அந்தத் துஷ்டர்களின் தீங்குகளினின்றும் நீங்கி நான் இதுவரை உயிரோடிருக்கமாட்டேன்.

சங்:—நீயும் அவ்வாறே பன்முறை என்னைக்காப்பாற்றியிருக்கின்றாய்; அதை உத்தேசிக்க நான் உனக்குச் செய்த சிறு உதவிகளுக்காக என்னை விசேஷமாகப் புகழவேண்டியதில்லை யென்பது விளங்கும்.

சந்:—உம்முடைய உதவிக்கு என்னுடைய உதவி ஆயிரத்திலொருமடங்கும் இணையாக மாட்டாது; தீரச்செயலுடையவர்கள் தற்பெருமையை விரும்பமாட்டார்கள். ஆதலின், நீர் உண்மைச் சாமர்த்தியமுடையவராயிருப்பதால் இவ்விதம் தற்பெருமையை விரும்பாமற் பேசுகின்றீர்; ஒரு சிறு காரியத்தையுமுடிக்க ஆற்றலில்லாத மூடர்கள்தாம் எங்கும் தற்பெருமை கூறி வாய்ப்பறை யடித்துத் திரிவார்கள். எஃதெப்படி யிருந்தபோதிலும் நீர்செய்த உதவிகளை நான் எப்பொழுதும் மறக்கமாட்டேன்; உம்மீது மிக்க அன்புடையவளாகவே யிருப்பேன்.

சங்:—நானும் அவ்வாறே உன்மீது அன்பு செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன். இன்னும் எத்தனையோ பேர் உன்னுடைய அன்பைப் பெறுதற்கு முயற்சி செய்தனர்; ஆதியில் சுப்பையாபிள்ளையும் மிகப் பாடு பட்டான்; அவர்களுக்கெல்லாம் அது கிடைக்காமற் போயிற்று. அந்தச் சுப்பையாபிள்ளைக்கு உன்னுடைய

அன்பு கிடைத்திருந்தால் உனக்கிவ்வளவு துன்பங்கள் நேர்ந்திருக்க மாட்டா.

சங் :—ஐயோ ! அந்தச் சுப்........அவன் பெயரையே சொல்லவேண்டாம்; விளையாட்டாகக்கூடச் சொல்ல வேண்டாம்; அவனை நினைக்கும்போதே என் ஈரல் துடிக்கின்றது. அவன் தான் என்னுடைய தயவைப் பெறுதலை முன்னிட்டு அத்தகைய கொடுமைகளை யெல்லாம் செய்தான். விபாங்கன், சங்கு என்ற பாவி கள் ஏன் இத்தகைய கொடுமைகளை நமக்குச் செய்து வந்தார்களோ?

சங்:—சுப்பையாபிள்ளை உன்னுடைய நேயத்தைப் பெறுத தால் பொறாமைகொண்டு அவ்வாறு செய்தான். இவர் கள், அவனுடைய புதை பொருளை எடுக்க முயன்றதை நான் தடுத்ததாலும், அதை நானே கைப்பற்றிக் கொண்டதாலும் என்மீது விரோதங்கொண்டு வஞ்சந் தீர்த்துக்கொள்ள முயன்றூர்கள்;நீ எனக்குச் சிநேகியா யிருப்பதால் உனக்கும் தீங்கியற்றுத் துணிந்தார்கள்; நம்மைச்சேர்ந்த மற்றவர்களுக்கும் கெடுதிசெய்தார் கள்.

சங்:—அவர்கள் செய்கைகளுக்குத் தகுந்த பயனை அனுப வித்து விட்டார்கள். எப்பொழுதும் துராத்மாக்களைக் கடவுள் ஒடுக்கி விடுவார்.

சங்:—எல்லாச் சடங்குகளும் ஒழிந்தன; இனிமேலாவது உன்னுடைய வாழ்க்கை இனிதாக நடைபெறவேண்டு மன்றோ?

சங்:—ஆம்; ஆனந்தமாக நடக்கவேண்டியதுதான்; இப் பொழுதும் நடந்துகொண்டுதானிருக்கின்றது.

சங்:—இப்பொழுது நடைபெறுவது இனியவாழ்க்கையில்லை; யௌவன முடையவர்களுக்குத் தனிப்பட்டவாழ்க்கை சந்தோஷத்தைத் தராது.

சந்:—நான் அப்படித் தனித்த வாழ்க்கை செய்பவில்லையே; ஒருவரோடு மிக்க நெருக்கமுடையவளாகவே இருந்து வருகின்றேன்.

சங்:—என்ன நீ சொல்வது அதிசயமாயிருக்கின்றது! எனக்குத் தெரியாமல் நீ எவர் துணையைக்கொண்டிருக்கின்றாய்?

சந்:—உமக்குத்தெரியாமல் நான் யார்துணையையும் கொள்ளவில்லை. அவர் உமக்குத் தெரிந்தவரே; இப்பொழுதும் அவர் என்னெதிரில் இருக்கிறார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சங்கரதாஸ் திடுக்கிட்டுவிட்டான். சந்திராபாய் தன்னைக் காதலித்திருக்கின்றாளென்பதை இந்த வார்த்தைகளின் குறிப்பினால் தெரிந்துகொண்டான். இவனும் ஆதிமுதலே அவள்மீது காதல்கொண்டிருந்தான். ஆனால் அதை அவளிடம் வெளியிடவில்லை. ஏனெனில், தான் அநேகம் ஆபத்துகளில் அவளுக்கு உதவிபுரிந்துவந்ததால் அக்காலங்களில் தன் காதல் எண்ணத்தை வெளியிட்டால் அதை உத்தேசித்தே அவ்வுதவிகளைச் செய்வதாக அவள் கருதக்கூடுமென்று நினைத்தே அதை வெளிப்படுத்தாதிருந்தான். சங்கரதாஸ் பிரதிபயன் கருதாது பிறருக்கு உதவிசெய்யக்கூடியவனாதலின், 'இவன் பயன்கருதி உதவிபுரிகிறான்' என்று எவரும் கருதுதற்கு இடங்கொடாமல் நடந்துகொள்ள வேண்டுமென்று அவ்வாறு செய்தான். அப்படி அவன் நினைத்திருந்தாலும், எதிரிகளெல்லாம் ஒழிந்து சங்கடங்களெல்லாம் நீங்கிச் சந்திரா

பாய் மனக்கலக்கமின்றி யிருக்குங்காலத்தில், தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாமென்றிருந்தான். சந்திரா பாயும் அவ்வாறே ஆதியில் பலரை வெறுத்திருந்தாலும் சங்கரதாஸின் நற்குணங்களைப்பற்றி அவன்மீது காதல்கொண்டு அதை வெளிக்குக் காட்டாமலிருந்தாள். இது நல்ல சந்தர்ப்பமாயிருந்ததால் தன் கருத்தைக் குறிப்பால் வெளிப்படுத்தினாள். சங்கரதாஸனும் தன் கருத்தை இத்தருணம் வெளிப்படுத்தக் கருதியிருந்தானதலால், தன் எண்ணத்திற் கனுகூலமாகவே சந்திராபாயின் வார்த்தை வெளிப்படவே அவன் மனதில் ஒருவித உற்சாகமுண்டாயிற்று. அதனாலே அவன் மனம் திடுக்கிட்டது.

சங்கரதாஸ் சிறிதுநேரம் யோசித்துக்கொண்டு மௌனமாய்நின்று, அதன்மேல் சந்திராபாயை நோக்கி, "நான் உன்னை நேசிக்கிறேன்; உன்னுடைய வார்த்தையால் உனது உள்ளக்கருத்தை நான் தெரிந்துகொண்டேன்; நீயும் உண்மையாகவே என்னை நேசிக்கிறாயா?" என்றான். சந்திரா பாய் ஒரு ரோஜா புஷ்பத்தைப் பறித்துக் கையிற் பிடித்துச் சுழற்றியபடியே ஒன்றும் பதில் கூறாமல் தலைகுனிந்து மௌனமாய் நின்றாள். அதுவே அவளுடைய சம்மதத்தை வெளிப்படுத்திற்று. பின்னர் இருவரும் முழுமனதுடனே ஒருவரை யொருவர் மணஞ்செய்துகொள்வதாக உறுதி செய்துகொண்டார்கள். அவர்களுடைய உள்ளத்தில் எப்பொழுதுமே உண்டாகியிராத நூதன சந்தோஷம் அன்றைக்கு உண்டாகியிருந்தது. பின் இருவரும் எழுந்து சந்தோஷமாக வார்த்தையாடிக்கொண்டே தோட்டத்தைச் சுற்றிவந்தார்கள்.

அவ்வாறு சுற்றிவரும்போது ஒரு மரத்தினடியில் சங்கரதாஸின் காலில் ஒரு துணியின் முனைசிக்கி இழுபட்டது.

அத்துணி நல்ல சித்திரவேலைப்பாடுள்ளதாயிருந்தது. அத ஞல் சங்காதாஸ் குனிந்து அதைக் கவனத்துடன் பார்த் தான். அது மண்ணிற்குள் புதைக்கப்பட்டிருந்தது. அதைத் தோண்டிப் பார்த்தான். உடனே அவன் முகத்தில் பெரிய ஆச்சரியமான குறி தோன்றிற்று. ஏனெனில், முன்னே சந்திராபாயின் வீட்டிலிருந்து, விபாங்கனைச் சேர்ந்த திரு டன் திருடிக்கொண்டுபோன, சங்காதாஸினுல் கண்டு பிடிக் கப்பட்ட டார்பிடோ மாதிரி அக்கைக்குட்டையில் சுருட்டிப் புதைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அவன், அத்தோட்டத் தில் புதைத்துவிட்டோடிய விஷயம், இதனைப் படிப் போர்க்கு முன்னரே தெரியும். அதைக்கண்டவுடன், சங் காதாஸ் கையிலெடுத்துக்கொண்டு சந்திராபாய்க்குக் காட்டி, "என் மனதிலிருந்த ஒரு பெரிய சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது; இனி மனதிற்கு எவ்வித கவலையுமிராது. விபாங்க னிடம் சிக்கிய டார்பிடோ படகின் மாதிரி, மீண்டும் என் வசத்தில் வந்து, தில்லைமாரனிடம் சிக்கிக் கடலில் ஒழிந்தது. அத்திருடனிடம் சிக்கிய மற்றொன்ருகிய இது, இருக்கு மிடம் தெரியாமலிருந்தது. எனினும் இதைக் கைப்பற்றிக் கொண்டோடிய திருடன் இறந்துவிட்டதாலும், அவனோடு சேர்ந்த மற்றொரு திருடன் உடனே சிறைசெய்யப்பட்டுத் தண்டனையடைந் தொழிந்ததாலும் அது அன்னியநாட்டார சாங்கத்தாரிடம் அகப்பட்டிருக்கமாட்டாதென்றும், அத் திருடரால் எங்கேனும் கைநழுவ விடப்பட்டிருக்கவேண்டு மென்றும் நான் மனதைச் சமாதானப்படுத்திக் கொண் டேன்; ஆயினும் அந்தச் சமாதானத்தால் என்மனம் நிம் மதி யடையவில்லை. ஒரு சமயம் தவறியோடிய அத் திரு டன் மூலம் அது புறநாட்டு ஆட்சியாளரிடம் சிக்கி யிருக் குமோ என்னும் சந்தேகம் ஏற்பட்டு என்மனதை உள்ளுக் குள்ளேயே கலக்கிக்கொண்டிருந்தது. அத்திருடன் இவ்

கிருந்து தலைறியோடும்போது அப்படகின் மாதிரியை இவ்விடத்திற் புதைத்துவிட்டோடி யிருக்கிறான். தெய்வச்செயலால் அஃதிப்பொழு தகப்பட்டுவிட்டது; இனி எல்லாக் காரியங்களும் அனுகூலமான மாதிரியே; நான் மீண்டும் அப்படகின் மாதிரியைக் கண்டுபிடித்துக் கொடுத்து நம்முடைய இராஜாங்கத்தாருக் குதவிசெய்யவேண்டுமென்று அரும் பிரயத்தனம் செய்துகொண்டு வருகின்றேன். அதற்கு முன் போலவே சிரமமெடுத்துக்கொள்ளவேண்டி யிருந்தது. இப்பொழுது இஃதகப்பட்டுவிட்டதால் அவ்வாறு சிரமப்படவேண்டியதில்லை. நல்லகாலத்திற்கு எல்லாம் அனுகூலமாகவே முடியும்'' என்று சொன்னான். சந்திராபாய் அதற்காக மிக்க ஆனந்தத்தை யடைந்தாள். உடனே இருவரும் சந்திராபாயின் மாளிகைக்குச் சென்றார்கள்.

அதன்மேல் சங்கரதாஸ், சந்திராபாயிடம் விடைபெற்றுக்கொண்டு தன் இரசாயனசாலைக்குப் போய், பூமிக்குள் புதைக்கப்பட்டிருந்த டார்பிடோபடகின் மாதிரியை வைத்துக்கொண்டு மற்றொன்றையும் விரைவாக முடித்து இராஜாங்கத்தாருக் கனுப்பினான். அவர்கள் அதை வைத்துக்கொண்டு அநேகம் டார்பிடோ படகுகள் செய்து உபயோகித்து அன்னியநாட்டுக் கடற் படைகளையெல்லாம் ஒழித்து எல்லா நாட்டார்களையும் வென்று ஜெயக்கொடி நாட்டினார்கள். அதனால் மற்ற நாடுகளையெல்லாம் இந்திரபுரி அடக்கியாளும் வன்மைபெற்றதாயிற்று. இந்த வெற்றிக்கெல்லாம் காரணம், சங்கரதாஸ் டார்பிடோ கண்டுபிடித்த சாமர்த்தியமே என்று, இந்திரபுரி இராஜ்ஜியத்தார் அவனை நன்குமதித்து இராஜாங்கத்தில் அவனுக்கு உயர்ந்த பதவி கொடுத்ததோடு, அவனால் கண்டு பிடிக்கப்பட்ட சுப்பையா பிள்ளையின் புதைபொருள்களெல்லாம் அவனுக்கே சேரும்படி உத்தரவளித்துவிட்டார்கள்.

இவ்வாறு சங்கரதாஸ், இராஜாங்கத்தாரின் நன்மதிப்பையும், அளவற்ற ஐசுவரியத்தையும் அடைந்தபின்பு சங்கர

தாஸனுக்கும் சந்திராபாய்க்கும் திருமணம் நிறைவேறியது. அக்கலியாணம் இராஜாங்கத்தாரின் உதவிகொண்டே நடைபெற்றதால் மிகச் சிறப்பாகவும் கௌரவமாகவும் ஓர் இராஜ குடும்பத்தின் சுபகாரியம்போலவே நடைபெற்றது. சங்கர தாஸனும் சந்திராபாயும் ஏககாலத்தில் மிகுந்த ஐசுவரிய முடையவர்களாயும், கௌரவஸ்தர்களாயும் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கையானது இந்திரனுடைய வாழ்க்கையினும் மேம்பட்டதாயிருந்தது. சங்கரதாஸின் சிபாரிசால் வரதாஸிங்குக்கும் இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது. இன்னும் சங்கரதாஸனுக்கும் சந்திராபாய்க்கும் உறவினராயிருந்த சகலரும் அவர்களால் சௌக்கியத்தை அடைந்தார்கள். இவ்வாறு, சங்கரதாஸனும் சந்திராபாயும் பலர்க்கும் உபகாரமுடையவர்களாயும், மிகுந்த ஐசுவரிய முடையவர்களாயும், ஆனந்தமுடையவர்களாயும், எல்லாம்வல்ல பரம்பொருளின் இணையடிகளை எப்பொழுதும் சிந்தித்துச் சந்ததிவிருத்தி யுடையவர்களாய் எப்பொழுதும் இன்புற்று வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

நண்பர்களே! அயோக்கியனாகிய சுப்பையாபிள்ளை விபாங்கன், சங்கு, நாகம்மாள் முதலியவர்கள் பஞ்சமாபாதகங்களைச் செய்யக்கூடியவர்களா யிருந்தபடியால் பலவித துன்பங்களை யடைந்தொழிந்தார்கள். சங்கரதாஸ், சந்திராபாய் முதலியவர்கள் பரோபகாரமுடைய தர்மகுணம் பொருந்தியவர்களா யிருந்தபடியால் முடிவில் இன்பம் நிறைந்த வாழ்க்கையுடையவர்களாய் அளவற்ற ஆனந்தமெய்தினர்கள். அன்பருள்ளத்தையே அழகிய வாசஸ்தலமாகக் கொண்டுறையும் அருட்பெருங் கடலாகிய கடவுள், நன்னெறியுடையார்க்கு எப்பொழுதும் ஒப்பில் துணையாவான் என்பதுறுதியாம். சுபம்.

ஓம் தத் ஸத்.

முற்றுப்பெற்றது.

PRINTED AT THE "ANANDA BODHINI PRESS," MADRAS.

இரத்தினபுரி இரகசியம்

மூன்றாம் பாகம்

186536.
சென்னை-600 008

1 - வது அத்தியாயம்.

இரண்டு கன்னிகா இரத்னங்கள்.

இந்திரனது நகரையும் வெட்கச்செய்யும் வனப்பும் செல்வமும் பொருந்திய இரத்னபுரிக்குச் சுமார் முப்பதுமைல் தூரத்திலுள்ள ஒரு தெய்வஸ்தலமாகிய கந்தபுரி என்னும் நகரம் மிக்க அழகும் சௌக்கியமும் பொருந்திய உல்லாச ஸ்தலமாகும். அந்த நகரின் ஓரத்திலுள்ள ஒரு அழகிய சிறுவீட்டில் இரண்டு கன்னிகைகள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சகோதரிகள். மூத்தவளாகிய கற்பகவல்லிக்கு வயது 20. இளையவளாகிய கோமளவல்லிக்கு 18 வயது. இவர்களுடைய தாய் தந்தையர் இவர்கள் சிறுவயதிலேயே யிறந்துவிட்டபடியால் தாய் தந்தையர் யாரென்றே யிவர்களுக்குத் தெரியாது. இவர்களுடைய அத்தையாகிய சுந்தரம்மாள் என்ற மூதாட்டி யிவர்களை வளர்த்து வருகிறாள்.

தங்கள் தந்தை ஒரு இராணுவ உத்தியோகஸ்தரென்றும், கோமளவல்லி பிறந்த இரண்டு மூன்று நாட்களில் அவர் யுத்தத்தில் மடிந்ததாகவும் அச்சங்கதியைக் கேட்டதே மனமுடைந்து இவர்கள் தாயாரும் மடிந்ததாகவும் அதுமுதல் அத்தையே தங்களைச் சம்ரக்ஷித்து வருவதாகவும் சுந்தரம்மாள் மூலமாயறிந்துகொண்டார்கள். வீடும் அதைச்

சேர்ந்த தோட்டம் முதலியவையும் சுந்தரம்மாளுடையதே. அம்மூதாட்டியின் வருமானம் கொஞ்சமேயாயினும், சிக்கனமுடையவளாதலால் இவ்விரண்டு பெண்களுக்கும் போதுமான கல்வி கற்பித்து, நல்லொழுக்கத்தோடும் நாணயத்தோடும் இவர்களை வளர்த்து வந்தாள்.

இருவரும் ஒரேமூலமாய் பயிற்சியடைந்தார்களேனும், பிறவிக்குணமென்கிற இயற்கை யமைப்பின்படி இருவருடைய லௌகிக நோக்கங்களும், மனோபாவங்களும், அபிப்பிராயங்களும், இச்சைகளும் வெவ்வேறாகவே யிருந்தன.

வாசிப்பில் கற்பகவல்லி காதல் விஷயங்களும் ஆச்சரியமும் திடுக்கிடும் சம்பவங்களும் அடங்கிய கட்டுக்கதைகளை வாசிப்பதிலேயே வாஞ்சையுள்ளவளா யிருந்தாள். கோமளவல்லியாகிய தங்கையோ பெரியோரும் கல்வியாளரும் எழுதிய காவியங்களையும் நீதிநூல்களையும் வாசித்து அறிவை விருத்திசெய்துக் கொள்வதிலேயே ஆவலுள்ளவளா யிருந்தாள். மூத்தவள் உழைப்பாளியல்ல. வீட்டிலுள்ள சாதாரண சிறுதொழில்களைச் செய்வதில் பிரியமற்றவள். கெம்பீரமாய் உடுத்துக்கொள்வதிலும், ஒரு சீமாட்டிபோல் நடந்துகொள்வதிலும் பிரியமுள்ளவள். இளையவளோ எப்போதும் அடக்கமும், கபடமற்றதன்மையும் உடையவளாய் சற்றும் பெருமையும் டம்பம்முதலியவையின்றி சாதாரணமாய் நடந்துகொள்பவள். யாவரிடத்திலும் அன்போடும் கருணையோடும் நடந்துகொள்பவள். வீட்டு வேலைகளில் கவனமுள்ளவள்; அவகாசமுள்ளபோதெல்லாம் தையல், பின்னல் முதலிய வேலைகளைச் செய்வதில் பிரியமுடையவள். மூத்தவள் சுயநலப்பிரியமும், கொஞ்சம் மமதையும் உடையவள். சிறுவயதிலேயே இக்குணங்கள் அவளிடம் தலைகாட்டத் தொடங்கின. பிறகு மங்கைப்பருவத்தில் அவை பகிரங்க

மாய் காணப்பட்டன. கோமளமோ பெருமையாவது சூது வாது கபடம் வஞ்சகம் முதலியவையாவது சற்றேனும் இல்லாதவள். களங்கமற்ற உள்ளமுடையவள். இவர்களிருவரும் மனநிம்மதியோடும் திருப்தியோடும் தங்கள் அத்தையிடம் இருந்துவந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் திடீலென்று ஒரு பெரிய விபத்து நேர்ந்தது. என்னெனில் இருந்தாற்போலிருந்து ஒருநாள் சுந்தரம்மாள் பாரிசவாயுவால் பீடிக்கப்பட்டதால் கைகால் செயற்கையற்று வாய்ப்பேச்சும் அற்றுவிட்டது. சகோதரிகள் இருவரும் சொல்லொணுத் துயரடைந்தார்களேனும் மிக்க பிரக்யாதிபெற்ற வயித்தியர்களை வரவழைத்துப் பார்த்தார்கள். வயித்தியர்க ளனைவரும் பார்த்துக் கடைசியில் சுகமடையாததால் "உயிருக்கு இப்போது பயமில்லை, வியாதி தீர்வது அசாத்தியம்" என்று கூறிவிட்டார்கள். மங்கையர் இருவரும் மிக்க துயரோடு அம்மூதாட்டிக்கு வேண்டிய உபசரணைகளை மிக்க பக்தியோடும் சிரத்தையோடும் செய்து வந்தார்கள்.

கற்பகவல்லியாகிய மூத்தவள் எப்போதுமே குடும்ப வேலைகளில் சிரத்தை யில்லாதவள் என்று முன்னமே கூறியிருக்கிறோம். ஆதலால் இப்போது குடும்பப் பாதுகாப்பனைப்பும் கோமளவல்லியின் தலைபாரமாய்விட்டது. கையிலிருந்த பணத்தைக்கொண்டு கோமளவல்லி சிக்கனத்தோடு குடும்பவிஷயத்தை நடத்தி வந்தாள். கொஞ்ச நாட்கள் கழிந்தபோது கடைசி ரூபாயையே மாற்றிச் செலவழிக்க நேர்ந்தது. சகோதரிகளிருவரும் மிக்க கலக்கமடைந்தார்கள். கடைசியில் இதுகாறும் எவ்வழியிலிருந்து பணம் வந்து கொண்டிருந்ததென்பதை யறிய அத்தையாரின் பெட்டிகளைத் திறந்து பார்த்தார்கள். பெட்டிகளில் இருந்த கடிதங்

கள் முதலியவற்ருல் இவர்களுக்கு வேண்டிய விஷயத்தைப் பற்றி எவ்விதத் தகவலும் விளங்கவில்லே. அச்சமயம் கோமளவல்லி "ஆ! அத்தை இரண்டுதரம் இங்குள்ள ஒரு பாங்கியில் போய் பணம் வாங்கிவந்ததைப் பார்த்திருக்கிறேன்; நான் போய் அங்கு விசாரித்து வருகிறேன்" என்று தமக்கைக்குக் கூறிவிட்டு உடனே பாங்கிக்குச் சென்ருள்.

கோமளவல்லி பாங்கிக்குச்சென்று தன் அத்தையின் பெயரைக் கூறியதே பாங்கிக்காரர் அவளை மிக்க மரியாதையோடு வரவேற்று நடந்த சங்கதியைக் கேட்டபின் "அம்மா உன் அத்தையாருக்கு என்னகாரணத்தால் பணம் வந்து கொண்டிருந்தது என்ற சங்கதி எனக்குத் தெரியாது. இரத்னபுரியிலுள்ள பச்சையப்பபிள்ளே என்பவர் போரால் சுந்தரம்மாள் 6 மாதத்திற் கொருமுறை 60 பவுன் வாங்கிக் கொள்வது வழக்கம். வேண்டுமானல் நடந்த சங்கதியை யவருக்குத் தெரிவிக்கிறேன். அவர் வழக்கப்படி நடக்க வேண்டுமென்று பிரியமிருந்தால் உண்டி யனுப்புவார்" என்ருர். கோமளவல்லி யவ்வாறே யெழுதச் சொல்லி விட்டுத் தமக்கையிடம் நடந்த சங்கதியைக் கூறினள். இரண்டு மூன்று நாட்கள் சென்று கோமளவல்லி மறுபடி பாங்கிக்குச் சென்றபோது, சுந்தரம்மாள் தீராவியாதியுற்று கேவலஸ்திதியிலிருப்பதைப்பற்றி தான் மிக்க துயாமடைந்ததாகவும், ஆயினும் இனி சகோதரிகள் இருவர்பேருக்கும் பழையபடி வருடம் இருமுறை 60 பவுன் அனுப்பப்படும் என்றும் பச்சையப்பபிள்ளே பதில் எழுதியதாகத்தெரிவித்து, அந்த அரை வருடத்தொகையை யவளிடம் கொடுத்தனுப்பினர்.

அதுமுதல் சகோதரிகளிருவரும் சந்தோஷத்தோடு எப்போதும்போல் தங்கள் அத்தையாரைப் பாதுகாத்துக் கொண்டு வந்தார்கள். சுமார் 18 மாதங்கள் சகோதரிகளிரு

வரும் நிம்மதியோடு காலத்தைக்கழித்துவந்தார்கள். அடுத்த 6 மாதங்களுக்குச் சேரவேண்டிய தொகைக்காக உண்டியனுப்பினார்கள். அவ்வுண்டிக்குப் பணம் வராமல் "இதற்குப் பணம் கொடுக்கும்படி அநுமதிவரவில்லை" யென்று கடிதம் வந்துவிட்டது. ஒருசமயம் பச்சையப்பபிள்ளை யனுமதி கொடுக்க மறந்துவிட்டிருப்பாரென்று கருதி கோமளவல்லியவருக்கு நேராய்க் கடிதம் எழுதினாள். அதற்குப் பதில் வரவில்லை. மறுபடி மறுபடி மூன்று நான்கு கடிதங்கள் எழுதியும் பதிலில்லை. கந்தபுரி பாங்கிக்காரர் பச்சையப்பப் பிள்ளையைநேரில் கண்டு தெரிவிக்கும்படி இரத்னபுரி பாங்கிக்காரருக்கு எழுதினார். அதற்கும் பதில் கிடைக்கவில்லை. என்னசெய்வார்கள். இரண்டொருநாட்கள் சென்றால் வீட்டிலுள்ள சாமான் முதலியவைகளைத்தான் விற்கவேண்டிய காலம் நேர்ந்துவிட்டது. சகோதரிகளிருவரும் யோசனை செய்து முடிவில் இருவரில் ஒருவர் நேராய் இரத்னபுரிக்குச் சென்று பச்சையப்பப் பிள்ளையை நேரில் காணவேண்டும் என்று முடிவுசெய்துகொண்டார்கள்.

இதுகாறும் சுறுசுறுப்பின்றி அசமந்தமாகவே யிருந்து வந்த கற்பகவல்லியாகிய மூத்தவள் இத்தீர்மானத்திற்கு வந்ததே ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்து தன் தங்கையைநோக்கி "கோமளம்! நம்மிருவரில் நான் மூத்தவளாயிருப்பதாலும், குடும்பவிவகாரத்தைக் கவனிப்பதிலும், அத்தைக்குச் சமயோசிதப்படி உபசரணை செய்வதிலும் உனக்கே நல்ல அனுபவமிருப்பதாலும், நானே இரத்னபுரிக்குச் செல்லவேண்டியவள்" என்று கூறிவிட்டு மறுநாளே போகவேண்டும் என்று தன் பிரயாணத்திற்கு வேண்டிய யாவற்றையும் ஆயத்தப்படுத்தத் தொடங்கினாள். கோமளவல்லி தன் தமக்கையின் கட்டளைக்கு மீறுதவளானபடியால் அவ்வாறே ஒப்புக்கொண்டாள். மறுநாள் இரத்னபுரிக்குச்

செல்லும் தபால் வண்டிக்கும் இடம் அமர்த்திக்கொண்டு கற்பகவல்லி இரத்னபுரிக்குப் புறப்பட்டாள். சகோதரிகள் இருவரும் பிரியும்போது கோமளவல்லி தமக்கையின் பிரி வாற்றத்தாளாதவளாய் கண்ணீர்விட்டு "அக்கா இரத்னபுரி யுனக்குப் புதுவிடமாகையாலும், அங்குதுஷ்டர்கள் அதிகம் என்று கூறப்படுவதாலும் நீ மிக்க ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அவள் மனதில் தன் தமக்கையை யிப்போது காண்பதே கடைசி; இனிக் காணமாட்டோம் என்று தோன்றியதால் மிக்க வியா கூல முடையவளானுள்.

மேற்கண்டவாறு கற்பகவல்லி இரத்னபுரிக்குச் சென் றது 1814ளூ ஜூலைமீ. இப்போது அவளுக்கு கிட்டத் தட்ட 21 வயதாகிறது. அவளுடைய வனப்பு முதிர்ந்து கனிந்த கனிபோல் இருந்தது. பார்ப்போர் உள்ளத்தை யுடனே கவரும் தன்மையிலிருந்தது. கடைசியில் கற்பக வல்லி வண்டியேறிப் புறப்பட்டாள். தன் தங்கையின் துய ரத்தைக் கண்டபோது கற்பகவல்லியும் மிக்க துயரமடைந்தா ளாதலால் தான் இருந்த நகரம் கண்ணுக்கு மறைந்ததே உலகமே தன்னை விட்டுப் போய்விட்டதுபோல் மனச்சோர் வடைந்தாள்.

அவள் இரத்னபுரிக்குள் பிரவேசிக்கும்போது இரவு ஏழுமணியாய்விட்டது. அந்நேரத்தில் பச்சையப்பப் பிள்ளை யின் விடுதியைக் கண்டுபிடிப்பது சாத்தியமல்ல, ஆகையால் மரியாதையான ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து மறுநாட் காலை 8 மணிக்கு பச்சையப்பப் பிள்ளையின் விலாசத்தில் கண்ட வீட்டிற்குச் சென்றுள். அது ஒரு பெரிய மாளிகை யாய்க் காணப்பட்டது. அங்கு சென்றதும் அவள் தான் ஏறிவந்த வண்டியின் சாரதியை விசாரித்தபோது அவன்

"அம்மா இது அருமைநாதம்பிரபு என்ற ஒரு சீமானுடைய மாளிகை-இதில் பச்சையப்பப் பிள்ளை யென்று யாருமில்லை. எனக்கு நெடுநாளாய்த் தெரியும்" என்றான். இதைக்கேட்டதே கற்பகவல்லி பேரிடிவிழுந்தவள்போ லானாள். இனி யென்செய்வது. எதற்கும் விசாரித்துப் பார்ப்போம் என்று கருதி வண்டியினின்றும் இறங்கிப்போய் அம்மாளிகையின் வாயில் காப்போனை நோக்கி, நான் அருமைநாதம் பிரபுவைக் காணவேண்டு மென்றாள். அவன் "அம்மா பிரபு நாலைந்து நாட்களாய் வீட்டிலில்லை. எங்கு சென்றாரோ தெரியவில்லை அவர் குமாரராகிய மதுரைநாயகம்பிரபு விருக்கிறார்" என்றான். கற்பகவல்லி "அவரையாவது கண்டு பேசவேண்டும்" என்றாள். காவலன் அப்படியானால் வாருமம்மா வென்று அவளை யழைத்துப்போய் ஒரு அறையில் உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்றான்.

கற்பகவல்லி அவ்வறையின் அலங்காரங்களைப் பார்த்துக்கொண்டே யிருக்கையில் 22 வயதுடைய நல்ல அழகும் பெருந்தன்மையான முகவிலாசமுமுடைய ஒருவாலிபன் அறைக்குள் வந்தான். அவனே அருமைநாதம் பிரபுவின் ஏகபுத்திரனாகிய மதுரைநாயகம் என்பவன். மிக்க கருணையும் மரியாதையுமுடைய யோக்கியன். அவன் கற்பகவல்லியைக் கண்டதே அவளிடம் கருணையோடும் மரியாதையோடும் விசாரித்து அவள் தன் கலவரநிலைமையைக் கூறக்கேட்டதே மிக்க விசனமடைந்து "அம்மா பச்சையப்பப் பிள்ளை யென்று இந்த மாளிகையில் ஒருவருமில்லை. உனக்கு எப்படி யுதவிசெய்வதென்று எனக்குப் புலப்படவில்லை. என்னால் ஆகக்கூடியது ஏதாவதிருந்தால் சந்தோஷமாய்ச்செய்ய ஒரு தடையும் இல்லை." என்றான். அவனுடைய விசுவாச மொழிகளைக் கேட்ட கற்பகவல்லி இன்னும் நாமிங்கிருப்பது மரியாதையல்லவென்று கருதி அவனுக்கு நாணத்தோடு வந்

தனமளித்து அங்கிருந்து வெளிப்பட்டாள். அவ்வாலிபப் பிரபு அவள் கூடவேவந்து மரியாதையோடும் விசுவாசத்தோடும் அவளை வண்டியில் ஏற்றினன். அவன் குணங்களைக்கண்ட கற்பகவல்லியின் மனம் கரைந்துவிட்டது.

அன்று காலங்கழிந்தது. வந்தவேலை அனுகூலமாய் முடிவதாய்த் தெரியவில்லை. என்னசெய்வது? அனுதி நிலைமைக்கு வந்திருக்கிறது. மூவர், அதிலும் வயோதிகமான அத்தையார் படுக்கையோடிருப்பவள், புத்தி ஸ்வாதீனமற்றவள். மூவரும் பட்டினியாய் இருக்கவேண்டும்; அல்லது யாசகம் செய்யவேண்டும். அந்தோ! என்செய்வது? கடைசி முயற்சியாய், இங்கிருந்து பச்சையப்பப்பிள்ளை எந்த பாங்கியின் மூலமாய் நமக்குப் பணம் அனுப்பி வந்தாரோ அந்த பாங்கியில் போய் விசாரிப்பதென்று தீர்மானித்துக்கொண்டாள்.

அவ்வாறே மறுநாட்காலை அந்த பாங்கிக்குச்சென்று விசாரித்தாள். அந்தப் பாங்கியின் முதலாளி, "அம்மா பச்சையப்பப்பிள்ளை யின்னுரென்று எங்களுக்குத் தெரியாது. அவர் தவணைப்படி பணத்தைக் கொண்டுவந்து பாங்கியிற் கட்டிவிடுவார். அதன்மேல் கந்தபுரி பாங்கியிலிருந்து கடிதம் வந்ததே நாங்கள் அதை யனுப்பிவிடுவது வழக்கம். இப்போது கடந்த தவணையிலிருந்து அவர் வரவேயில்லை." என்று கூறிவிட்டான்.

இதைக்கேட்டதே கற்பகவல்லியின் துயரம் பூரணமானதாய் விட்டது. இனி யென்செய்வது. கூடியசீக்கிரமாய்க் கந்தபுரிக்குத் திரும்பி தன் தங்கையிடம் தங்கள் அனுதாவான நிலைமையைக் கூறிவிடவேண்டியதே காரியம் என்று மனதில் ஸ்திரப்படுத்திக்கொண்டு அந்நகரிலிருந்து கந்தபுரிக்குச் செல்லும் தபால்வண்டி யாபீசுக்குச்சென்று

எப்போது வண்டி செல்வதென்று விசாரித்தாள். அச்சமயம் அங்கு ஏக ஜனக்கூட்டமாயிருந்தது. அதோடு முரடனைப்போன்ற ஒரு மனிதன் இரண்டொருதரம் தன்மேல் முரட்டுத்தனமாய் உராய்ந்துகொண்டு சென்றதைக் கண்டு துரிதமாய்க் கும்பலைவிட்டு வெளிப்பட்டு ஆபீஸுக்குட் சென்று வண்டியில் தனக்கு இடம் பேசிக்கொண்டு பணம் கொடுக்கத் தன் பணப்பையை யெடுக்க மடியில் கைவைத்துத்தடவினாள். அந்தோ பணப்பை அடியோடு காணவில்லை.

அப்பையிலிருந்த பணந்தான் தன்னிடமிருந்த ரொக்க ஸ்திதி. வேறொரு காசுகூட தன்கையிலில்லை. பணத்தைப் பற்றி ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்றே யதை யெப்போதும் ஜாக்கிரதையாகவே தன் மடியிலேயே வைத்திருந்தாள். இப்போது கையில் காசில்லாத நிலைமையாய்விட்டது அவள் துயரத்திற்கோ ரளவில்லை. எப்படி வீடு போய்ச் சேர்வது? என்னசெய்வது? அறிமுகமானவர் ஒருவருமில்லை. யாரிடம் உதவிகேட்பது ? அவளுக்குப் பெருங்கலவரமாய் விட்டது. அதனால் இந்தப்பெரிய நகரத்தில் அத்திருடனை நாம் தேடிப்பிடிக்க முடியாது என்பதை யுணராமல் ஆத்திரத்தோடு வீதியில் நடந்தாள்; ஆயினும் சற்று நேரத்திற்குள் புத்தி நிலைக்குவர "நாம் செய்வது முட்டாள்வேலை'' என்று உணர்ந்தவளாய் வீதியிலேயே துயரத்தோடும் கலவரத்தோடும் பிரமை கொண்டு நின்றாள்.

அச்சமயம் எதிரில் ஒரு ஸ்திரீ வந்தாள். அவளுக்கு வயது சுமார் 45-இருக்கும்; நல்ல நாணயமான உடையணிந்துகொண்டிருக்கிறாள். மிக்க அன்பும் கருணையும் அவள் முகத்தில் ததும்பியது. அம்மாது நமது கற்பகவல்லியைக் கண்டதும் சற்று நேரம் உற்று நோக்கித் தாயினும் கருணையுடையவள்போல் மிக்க அன்போடு விசாரித்தாள்.

கற்பகவல்லி எப்போதும் இரத்னபுரி நகரைப் பார்த்தவளே யல்ல. சூது, தந்திரம், மோசம், கன்மனம், கொலைக்கஞ்சாத் துணிகரம் முதலிய துர்க்குணங்களில் முதற்றரமானவர்கள் அங்கு ஏராளமா யிருக்கிறார்களென்பதை யவள் அறியாள். ஆகையால் இந்த ஸ்திரீ பேசிய மாதிரியால் அவள் மகா காருண்யமுள்ளவளென நம்பி தன் சமாசாரம் முழுதும் அவளிடம் கூறிவிட்டாள். அவ்வாறு நம்பியதால் என்ன நேர்ந்ததென்பது பின்னால் தானே வெளியாகும்.

---

2 - வது அத்தியாயம்.

ஸ்நானத் தொட்டியின் பயங்கரமான மர்மம்.

முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவம் அதாவது கற்பகவல்லி இரத்னபுரிக்கு வந்தது 1814ஆம் ஜூலைமாத மத்தியில் என்பதை நண்பர் மறக்காமலிருக்கும்படி கோருகிறோம். இப்போது நாம் கூறப்போகும் சம்பவம் மேற்கண்ட சம்பவத்திற்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் அதாவது 1814ஆம் ஜூன்மீ முதலில் நடந்தது.

இரத்னபுரி நகரத்தின் ஓரத்திலுள்ள பள்ளத் தோட்டம் என்ற ஆரோக்கிய ஸ்தலத்திலுள்ள ஒரு அழகான சிறு மாளிகையின் மேல்மாடியிலுள்ள ஒரு அறையில் மிக்க அழகு வாய்ந்த ஒரு மாது தனியே யுட்கார்ந்திருந்தாள். அப்போது இரவு மணி பதினொன்றிருக்கும்.

அம்மாதிற்கு வயது சுமார் 25 இருக்கும். அவள் காண்போர் உள்ளத்தைக் கவரத்தக்க வனப்புடையவள். இம்மாது சயனத்திற்குச் செல்லவேண்டியவளே யாயினும் இன்னும் தீபத்தை யணைக்காமலே ஒரு பெரிய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு எதற்காகவோ யாருக்காகவோ

மிக்க ஆவலோடு எதிர்பார்க்கிறவளைப்போல் அடிக்கடி சாள ரத்தைக் கவனித்துக்கொண்டேயிருந்தாள். அவள் இருக்கு மறையில் ஸ்நான அறையொன்றிருந்தது. அதற்குள் குளிக் கும் பெரிய தொட்டியொன்று இருந்தது. இதன்மேல் மூடி ஸ்நானம்செய்யும் வேளைதவிர மற்ற வேளைகளில் மூடப்பட் டிருப்பது வழக்கம்.

அம்மாது ஒரே நோக்கமாய்ச் சாளரத்தைக் கவனித் துக்கொண் டிருக்கும்போது சாளரக்கதவின்மேல் யாரோ சிறு கல்லை யெறிந்ததுபோல் கொஞ்சம் சத்தம் கேட்டது. உடனே அம்மாது அச்சத்ததைக் கேட்டவுடனே தட் டென்றெழுந்து ஸ்நான அறைக்குள் சென்று அங்கிருந்து பட்டுக்கயிற்றால் செய்யப்பட்ட ஒரு நூலேணியை யெடுத்து வந்து சாளரத்தின் கம்பியில் ஏணியின் ஒரு முனையைக்கட்டி விட்டு மற்றதை வெளியில் விட்டுவிட்டாள். இரண்டொரு நிமிடங்களில் ஒரு மனிதன் ஏணியின் வழியாய் ஏறி வந்து அறைக்குள் வந்தான்.

அவனுக்கு வயது சுமார் 43 இருக்கும். ஆனால் பார் வைக்கு நாலைந்து வயது குறைந்தவன்போல் காணப்பட் டான். அவன் கெம்பீரமான முகவிலாசமும், பூரண அழ கும் வாய்ந்தவன். அவன் அறைக்குள் வந்ததும், அம் மாதும் நூலேணியை யவிழ்த்துவந்து அறையில் வைத்து விட்டாள். அந்த மாளிகை பாட்டைக்குச் சற்று தூரத்தி லிருந்தது. அதைச்சூழ்ந்து ஒரு பெரிய தோட்டம் இருந் தது. அதனால் அந்தச் சாளரத்தில் தீபம் பிரகாசித்துக் கொண்டிருந்ததும் பிறகு அணைக்கப்பட்டதும் யாராலும் காணப்படவில்லை. அப்புருடன் மிக்க நாகரிக முடையவ னென்றும், நாணயமானதும் கேட்போர் மனதைக் கவரும் படியானதுமாகிய சம்பாஷணை யுடையவன். ஆதலால்

இருவரும் ஒருவர்மே லொருவர் ஆழ்ந்த பரஸ்பரக் காத லுடையவர்கள் என்று சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். இவர்கள் நேசம் நெறி பிசகியதெனினும் அவர்களுக்குள் இருந்த அன்பு உண்மையானதே.

அப்புருடன் அறைக்குள் வந்ததே "ஆ! என் அன் பார்ந்த காதலியே! கடைசியில் நாம் சந்திக்கும் காலம் இன்றுதான் கைக்கெட்டியது. இந்த இரண்டு மாதமும் எனக்கு இரண்டு யுகம்போலிருந்தது" என்றான்.

அம்மாது:—"அந்தோ என் மனோவேதனை கடவுளுக்கே தெரியும்; என் புருடன் இதுவரையில் வீட்டைவிட்டு வெளி கிளம்பவேயில்லை. என்னமோ தெய்வகடாட் சத்தால் இன்றுதான் ஏதோ அலுவலாய் வெளிநாட் டிற்குச் சென்றான். நாலைந்து நாட்களில் வருவதாய்ச் சென்றான்." என்றாள்.

அவள் காதலன் "என் அருமைக் காதலியே! நான் தினே தினே வந்து உன் சாளரத்தைப் பார்த்துப் பார்த்து புண்பட்ட மனதோடும் ஏக்கத்தோடும் வந்தவழியே திரும் பிச் சென்றுகொண்டிருந்தேன். இன்று வந்து பார்த்தேன். ஆ! உன் சாளரத்தில் நாம் ஏற்பாடு செய்துகொண்டபடி தீபக்குறி யிருக்கக் கண்டதே யெனக்குண்டான ஆனந்தத் திற்கு அளவே யில்லை" யென்றான்.

அந்தோ பரதாரவாஞ்சை யெத்தகைய ஆபத்தை யுண் டாக்குமென்பதையும் அதனால் எத்தகைய கொடிய தேவ தண்டனை யுண்டாகு மென்பதையும் காதற்பேயின் வயப் பட்ட அம்மூடன் அறிந்தானில்லை. அம்மாதாயினும் அந்தோ கடவுள் முன்னிலையில் நாம் மணம்புரிந்த புருட னைத் துரோகம் செய்கிறோமே என்பதைச் சிந்தித்தவளல்ல, இது எந்தச் சமையத்தில் என்ன ஆபத்தை யுண்டாக்குமோ,

நமது இரகசியத்தை உலகோர்க்கு மறைக்க எண்ணுவதே கூடாதகாரியமாயிற்றே. அப்படியிருக்கப் பரம நியாயாதிபதியாகி எங்கும் நிறைந்து அவரவர் உள்ளத்திலேயே மறைந்து நிற்கும் பரமதயாளுவாகிய ஆண்டவனுக்கு மறைக்க முயலுமோ? அவன் தண்டனைக்குத் தப்பமுடியுமோயென்று சற்றேனும் கருதியவளல்ல.

மேற்கண்டவாறு இருவரும் தம்தம் காதலை வெளியிட்டுக்கொண்டிருக்கையில் யாரோ மும்முரமாய்த் தெருக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. உடனே இருவரும் திடுக்கிட்டலறினார்கள். அந்தோ கள்ளக்காதலின் மனோநிம்மதியைப் பாருங்கள். அம்மாது கருடன் வாசனையை யுணர்ந்த நாகம்போல் ஆவியொடுங்கி,

"அய்யோ ஆண்டவனே! என் கணவன்! என்கணவன்! திரும்பிவந்துவிட்டான். அந்தோ! ஒருவேளை என்மேல் சந்தேகங்கொண்டு வெளியூருக்குச் செல்வதாய்ச் பாசாங்கு செய்து திரும்பிவந்ததாயின்—அந்தோ! என்னைக் கொன்றுவிடுவான்--கொன்றுவிடுவான்" என்று துடி துடித்தாள்.

அம்மனிதன்:—"என் கண்மணியே வீணாய்ப் பயங்கொள்ளாதே. நாம் எவ்வளவோ சாக்கிரதை யெடுத்துக்கொண்டு நடப்பதால் அவன் சந்தேகங்கொள்ளக் காரணமேயில்லை" என்றான்.

அம்மாது:—அய்யோ! நீ யெங்காவது மறைந்துகொள்ள வேண்டும். மறைந்துகொள்ளவேண்டும். தப்பமுடியாது

காதலன்:—ஆம் என்னை யெங்கேனும் மறைத்துவிடு. எங்காயினும்—யாவரும் நித்திரை செய்யும்போது நான் வெளிதாண்டிவிடலாம். அதோ வேலைக்காரன் கதவைத் திறக்கப் போகிறான்.

அம்மாது:—"ஆ! ஆ! வாவா! ஸ்நான அறை" யென்று கூறிக்கொண்டே அவனை யழைத்துக்கொண்டு ஸ்நான அறைக்குச் சென்று அங்கிருக்கும் தொட்டிக்குள் அவனைப் பதுங்கிக்கொள்ளச்செய்து அதன் கதவை மூடி மேலே தாளிட்டு விட்டாள்.

அவள் அவனை மறைத்துவிட்டுத் தீபத்தை யேற்றிச் சட்டென்று அறையின் கதவைத் திறந்தாள். மறுவிநாடி மிக்க அவசரத்தோடு அவள் கணவன் அறைக்குள் வந்தான். முதலில் இவள் மிக்க திகிலோடிருந்தாள். ஆனால் கணவன் கூறிய இரண்டொரு மொழிகளால் அவனுக்கு நம் மேல் சந்தேகமில்லையென்றுணர்ந்து "ஏன் உடனே திரும்பி விட்டீர்கள்?" என்றாள்.

அவன் மிக்க அவசரத்தோடு "ஒன்றுமில்லை. பயப் படாதே. நாம் இதைவிட்டுத் தட்சணம் புறப்படவேண்டும்; நாளைகாலை துறையூரில் சாப்பிடவேண்டும். வண்டிவாயிலில் தயாராய் நிற்கிறது. நாம் ஆலசியம் செய்யாமல் பாஞ்சால நாட்டிற்குப் போய்விட வேண்டும். நான் சந்திரனைக் கொன்றுவிட்டேன். விருந்து நடந்துகொண்டிருக்கையில் இருவர்க்கும் சண்டையுண்டாய்விட்டு மிஞ்சிப்போய் விட் டது. இவ்விஷயம் அடங்கிப்போகுமட்டும் நாம் வெளி நாட்டிலேயே யிருக்கவேண்டும்" என்றான்.

அம்மனிதனுக்கு வயது கிட்டத்தட்ட 50 இருக்கும். அவளுடைய தகப்பன்போல் இருப்பான். அவன் கூறிய விஷயத்தைக் கேட்டதே அவள் அலறி அய்யோ கத்திச் சண்டையா—கிருஷ்ணராயப்பிரபு வீட்டில்—" என்றாள்.

அம்மனிதன்:—"கத்தியல்ல கைத்துப்பாக்கியால் சுட்டுவிட் டேன். வீணாய்ப் பேசுவதில் பயனில்லை. சீக்கிரம் துணிமணிகளை யெடுத்துக்கொள்" என்றான்.

அம்மாது:—"அப்படியானால் என்னைக்கூடவா இப்போதே புறப்படச் சொல்லுகின்றீர்கள். நான் எல்லாவற்றை யும் ஒழுங்கு செய்துவிட்டு நாளைக்கு அல்லது அடுத்த நாள் புறப்பட்டு வரக்கூடாதா?"

கணவன்:—"இல்லை யில்லை கட்டாயம் புறப்படவேண்டி யதே" என்றான்

இனிப் பேசுவதில் பயனில்லையென்று அம்மாது தெரிந்துகொண்டு தன் வேலைக்காரியை யழைத்தாள். வீடு முழுதும் பெருங் கலவரமாயிருக்கிறது. பிரயாணத்திற்காக பெட்டிகள் மூட்டைகள் யாவும் அவசரத்தோடு வண்டியில் ஏற்றப்படுகின்றன. அம்மாது தன் பெட்டியை ஸ்நானத் தொட்டியின்மேல் வைத்துவிட்டாள். கடைசியாய் அதை யெடுத்துக்கொண்டால் தொட்டியின் மேல்மூடியை யாரும் திறக்க அவகாசம் நேரிடாது என்பது அவள் கருத்து. புரு டன் மிக்க அவசரப்படுத்துகிறான். எல்லா சாமான்களும் வண்டியில் ஏற்றியாய்விட்டது. ஏன் இன்னம் ஆலசியம் என்று கூவுகிறான். அவளோ என்னமோ தேடுகிறாள். அங் கும் இங்கும் அவசரத்தோடு ஓடிக்கொண்டு சந்திலும் பொந்திலும் கையிட்டுப் பார்க்கிறாள். என்ன தேடுகிறாள்? கலவரத்தில் நூலேணி வைக்கப்பட்ட இடத்தை மறந்துவிட் டாள். அது தன் கள்ளக் காதலனிடம் அளிக்கப்பட்டால் தான் அவன் தப்பித்துககொண்டு போகமுடியும். அதோடு அது எப்படியோ கொண்டுபோகப்படும் மூட்டைகளில் சிக்கிக்கொண்டு பிறகு புருடன் கண்ணில் அகப்பட்டுக் கொண்டால் பெருமோசமாய் முடியும். அதனால் பெருந் திகிலோடு தேடினாள். புருடன் மறுபடி கேட்டதற்கு மோதி ரம் எங்கோ விழுந்துவிட்டது என்றாள். புருடன் போனால் போகட்டும்; வேறொன்று வாங்கிக்கொள்ளலாம் என்றான்.

இரண்டொரு நிமிடங்களில் ஏணி யகப்பட்டுவிட்டது. துரிதமாய்ச் சென்று தொட்டியில் தொங்கும் தாழ்ப்பாளைப் பிடித்து கொஞ்சமாய் மேல்மூடியைத் தூக்கி நூலேணியை யதற்குள் தள்ளிவிட்டு அவசரத்தில் கையைத் தட்டென்று விட்டுவிட்டு மறுபடி கூறும் புருடனுக்கு அகப்பட்டது அகப்பட்டது என்று கூறிக்கொண்டே அறையின் கதவை மூடிவிட்டுச் சென்றாள்.

இவர்கள் செல்லும் பிரயாணத்திலிருந்து எப்போது திரும்பிவருவார்களென்று நமக்குத் தெரியாது. முதலாவது அந்த புருடன் பெண்சாதி யார், பெயரென்ன, ஊரென்ன என்பது முதலான ஒரு சங்கதியும் நமக்குத் தெரியாது. அவர்களுடைய நடவடிக்கைமட்டும் ஒருவாறாய்த் தெரிந்து கொண்டிருக்கிறோம். புருடன் கொலைபாதகன் மனைவி புருடத் துரோகி. ஆரம்பத்தில் இந்த இரண்டு மாபாதகங்களுக்கு அஞ்சாத இவர்களின் முடிவு என்னவாகுமோ அதைமறவாமல் கவனிப்போம். பரதாரத்திற் கிச்சைவைத்து வந்தஅம்மனிதன் யாரோ அது நமக்குத்தெரியாது. பெரிய பெட்டிபோன்ற ஸ்நானம் செய்யும் தொட்டியில் பதுங்கி யிருக்கும் அவன் கெதி யென்னகிறதோ அதையும் கவனிப்போம். இந்த ஆசாமிகள் மூவரைப்பற்றியும் பின்னால் பிரஸ்தாபம் வராமற்போகாதாகையால் பொறுமையோடு காத்திருப்போமாக.

---

3 - வது அத்தியாயம்.

முன் கூறிய மர்மமான விஷயங்கள் நடந்த மறுநாள் இரவு சுமார் 9 மணியிருக்கும். இரத்னபுரியி லுள்ள அழகிய உயர்தர மாடமாளிகைகள் நிறைந்த வீதி களிலொன்றில் இருக்கும் மிக்க அழகும் கெம்பீரத்தோற் றமுமுடைய ஒரு பெரிய மாளிகைக்குள் பார்ப்போமாயின் இது இம்மண்ணுலகத்தில் கட்டப்பட்ட மாளிகைதானோ அல்லது தேவருலகிலிருந்து இங்கு பூதகணங்களால் கொண்டு வந்து வைக்கப்பட்டதே வென்று மிக்க சந்தேகத் திற் கிடமுண்டாகும்.

அம்மாளிகையின் கீழ்க்கட்டிலுள்ள ஒரு கூடத்தில் பல சூரியர்கள் பிரகாசிப்பதுபோல பல அழகிய தீபங்கள் ஓரே ஜோதிமயமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்றன. சுவர் கள் முழுமையும் உயர்தரமான பட்டில் பொற்சரிகையால் பல அழகிய விசித்திரமான பூவேலைகள் செய்யப்பட்டு முத்துச்சாலர் வைக்கப்பட்ட திரைச்சீலைகள் மெதுவாய் அசைந்துகொண்டே தொங்குகின்றன. ஒரு பெரிய வட்ட மான மேஜையும் அதைச்சுற்றி பட்டுத்திண்டுகள் வைத்து தைக்கப்பட்ட நாற்காலிகள் ஆறு இருக்கின்றன. கீழே கால் ஒரு அடி உள்ளே யழுந்திவிடத்தக்க விலையுயர்ந்த காஷ்மீரக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. மூலைகளில் அழகிய சீனதேசத்து புஷ்பத் தொட்டிகளில் இருக்கும் பல வித மலர்களின் நறுமணம் அவ்வீடு முழுமையுமே ஆரோக் கியமாய் வீசிக்கொண்டிருக்கிறது.

இவ்வித இரம்மியமான ஸ்தலத்தில் மனிதர் இல்லா விட்டால் என்ன அழகில்லையே யென்பீர்களன்றோ. அக் குறைவு அங்கில்லை. விலையுயர்ந்த ஆடையாபரணங்க ளணிந் திகொண்டிருக்கும் ; ஆறு புருடர்கள் அங்கு மேஜையைச் சுற்றியிருந்த ஆறு நாற்காலிகளிலும் உட்கார்ந்திருக்கி ருர்கள்.

அம்மாளிகையின் எசமான் சுகசிங்கம் பிரபு என்பவர். அவர் இரத்னபுரி நாட்டின் இளவரசருக்கு மிக்க சினேகிதர். மனமொத்த சினேகர். அவருக்கு வயது 60 ஆகிறது. அவர் ஜன்மத்தில் அவர் படித்த சாத்திரமனைத்தும் கூடி சிற்றின்ப சாகரத்தில் நீந்தியுலாவுவதேயாகும். அவருக்கு மனைவியே னும் மக்களேனுமில்லை. அவருடைய சொத்திலிருந்து வரு டாவருடம் இலட்சக்கணக்கான பவுன் வரும்படி வருவதால் அவர் தன் மனம்போனபடி ஒரு கஷ்டமுமின்றி தன் போன்ற நடக்கையுடைய வாலிபர்களோடு கூடிக்கொண்டு இன்னும் வாலிபர் விளையாட்டிலேயே கண்ணும் கருத்து முடையவரா யிருக்கிருர்.

அவருடைய அழகு முதலியவற்றைக் கூறப்புகின் மிக்க வேடிக்கையே. தலையில் பெரும்பாலும் உரோமங்க ளுதிர்ந்துபோய் உச்சியில் மட்டும் எள்ளும் பச்சரிசியும் கலந்ததுபோல் சுமார் மூன்றங்குல வட்டத்திற்கு இரண் டங்குல நீளத்திற்கு குடுமிபோலிருந்தது. ஆனுல் அவரோ நீண்டு கருத்த பளபளப்பான பொய்ச்சிகை யுடையவராய் மீசைக்குக் கருப்பு மை பூசிக்கொண்டிருந்தார். முகத்தி லுள்ள திரைகள் மறைய, தச்சன் மரத்தின் வெடிப்புகளை மறைக்க இலப்பம் பூசுவதுபோல், ஒருவிதக் கூட்டுப்பசை பூசிக்கொள்வார். அவருடைய பற்கள் சற்றேனும் வரிசை பிசகாது கோத்த முத்துகள்போல் பளபளவென்று பிரகா

சித்துக் கொண்டிருக்கும். ஆனால் அப்பற்கள் நமது பற்கள் போல் இருந்தவிடத்திலேயே பந்தமா யிருப்பவையல்ல. இராக்காலத்தில் அவர் மேஜைமேல் வைக்கப்பட்ட வாசனை நீர் நிறைந்த ஒரு கிண்ணத்திலும் பகலில் அவருடைய வாயி லுமாய் மாறி மாறி வாசஞ் செய்யும். அவருடைய தேகம் வாலிப தேகம்போல் தசைக்கட்டுடையதாய்த் தோன்றும் பொருட்டு பாஞ்ச நாட்டிலுள்ள ஒரு தையற்காரனுக்கு மிக்க பணம் கொடுத்தால் அவன் உடைக்குள் பஞ்சுபில்லை கள் வைத்து தேகம் வாலிபக் கட்டுடையதுபோல் தோன் றும் வண்ணமாய் உடைகளைத் தைத்துக் கொடுப்பான். கை தேர்ந்த சமையற்காரனுக்கு வருடம் ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுப்பதென்றால் மற்ற விஷயங்களைப் பற்றி நாம் என்ன கூறவேண்டும். இன்னும் ஒரு விஷயம், அவர் அருந்தும் குடிவகைகளை உருசி பார்த்து சேகரம் செய்பவ னுக்கு மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம். அந்தோ அறி வில்லானிடம் பணம்மட்டு மிருப்பதால் உண்டாகும் தீய பலன்களை இவர் சரித்திரத்தில் தெளிவாய்க் காணலாம்.

இளவரசனுக்கு இப்போது வயது 52. அவருடைய சமாச்சாரங்களை இரத்தினபுரி இரகசியம் 1, 2 பாகங்களில் பார்த்திருப்பீர்களாதலால் அதைப்பற்றி கூறுதுவிடுத்தோம். இவர்கள் இருவர்போக மீதியிருக்கும் நால்வர்கள் பின்வரு மாறு:—

1. குமாரவேலுப் பிரபு இவருக்கு வயது 30 ஆகிறது. இவர் சற்று உயரமான அழகு புருடரே. நல்ல செல்வவந்தர். நான்கு வருடங்களுக்கு முன்புதான் இவர் ஒரு அழ கிய செல்வவதியை மணம்புரிந்துகொண்டார். ஆனால் இவர், "தன் மனையாளைத் தனிமனை யிருத்தி - பிறர் மனைக்கேகும் பேதையும் பதரே" என்ற ஆன்றோர்

வாக்கியத்திற் கிலக்காய் எப்போதும் சிற்றின்ப விளை யாட்டிலேயே காலத்தைக் கழிப்பவர்.

2-வது. கர்னல் மாரப்பன்—இவனுக்கும் சுமார் 30 வயதே. இவன் டம்பாகாரமாய்ப் பேசுவதிலும் நடப்பதிலும் பிரியமுடையவன். வீண் டம்பக்காரன். கையிலிருந் ததை வீண் விரையம் செய்துவிட்டு கடன்காரனாய் ஆபத்திற் சிக்கிக்கொண்டு அதிலிருந்து தப்பித் துக் கொள்வதற்காக ஒரு கசாப்புக்காரன் புத்திரியை மணம் செய்துக்கொண்டான். இவன் பிரபுக்கள் வமி சத்தில் சுற்றமுடையவனாதலால் கீழ் அந்தஸ்தில் மணம்செய்துக் கொண்டதுமுதல் உயர்ந்த அந்தஸ்தி லிருப்போர் இவனைப்பற்றி இழிவாய்ப் பேசத் தலைப் பட்டார்கள்.

3-வது. ஸர்தார் சூரியநாயகம். இவனுக்கு வயது 26-27 இருக்கும். திரண்ட செல்வமுடையவன். அழகனே யெனினும் வியாதியுற்றவன்போல் காணப்படுவான். குடிப்பதும் சூதாடுவதும், ஸ்திரீலோலனாய்க் காலத் தைக் கழிப்பதுமே யவனுக்கு மோக்ஷ உலகம். அவன் பிரம்மச்சாரி யென்றாலும் கலியாணம் செய்துக் கொள்ள விரும்புகிறவனாய்க் காணப்படவில்லை.

4-வது செல்லப்பன். இவனுக்கு வயது 24. இவன் இள வரசனுக்கு மனமொத்த நண்பன் என்பதைவிட வேறொன்றும் தெரியவில்லை. அதனாலேயே யாவரும் இவனிடம் மரியாதையாகவும் விசுவாசத்தோடும் நடந்து கொள்கிறார்கள். அவன் பத்மாவதி யென்ற ஒரு மாதின் வளர்ப்புப்பிள்ளை யென்று கூறப்பட்ட போதிலும், இவன் அம்மாதின் சொந்த புத்திரனே யென்றும், 'அம்மாது ஒரு காலத்தில் இளவரசனுக்கு

மனமொத்த நேசியா யிருந்தாளென்றும் வதந்தி யெங்கும் உலவிக்கொண்டிருந்தது.

எது எப்படியாயினும் செல்லப்பன் இளவரசனுடைய இணை பிரியாத சினேகன் என்பது யாவரும் பிரத்யக்ஷமாய் அறிந்த விஷயம். அவனும் இளவரசன் தன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தால் பெருமை யடைந்து அளவு மீறி நடந்து கொள்ளாமல் மிக்க ஜாக்கிரதையோடு நட்பைக் காப்பாற்றிக் கொள்பவன்.

இப்போது நாம் கூறியவற்றால் அறுவருடைய குணாதிசயங்களும் நடவடிக்கைகளும் இம்மாதிரியென்று ஒருவாறு அறிந்துகொண் டிருப்பீர்கள். இவர்கள் விருந்துண்டு உயர்ந்த குடி வகைகளைப் பானம் செய்துக்கொண்டே சம்பாஷிக்கத் தொடங்கினார்கள். இவர்களுடைய சம்பாஷணை எந்தத் துறையிற் செல்லும் என்பதை நாம் கூறாமலே நண்பர் அறிந்து கொள்வீர்கள். ஆயினும் கதையின் தொடர்ச்சிக்கு அவசியமானவற்றைக் கூறுகிறோம்:—

இளவரசன்:—"நமது நகரத்தில் எங்கு பார்த்தாலும் பார்த்த முகமாகவே யிருக்கிறது பழைய விளையாட்டே, பழைய அனுபவமே, பழைய ஆசாமிகளே. யாவும் பழயதே. புது உருவமாவது புதிய உருசியையாவது புதிய உற்சாகத்தை யுண்டாக்கத்தக்கதாவது ஒன்றுமேயில்லை" யென்றான்.

சுகசிங்கம் பிரபு:—"ஆ! உலக விவகாரத்தையே தாங்கள் விட்டுவிட்டு சன்யாசம் வாங்கிக் கொண்டதுபோல் தோன்றுகிறது."

இளவரசன்:—என்? என்?

செல்லப்பன் :—நகர முழுதும் ஒரே கொந்தளிப்பாய்க் கொதித்துக்கொண் டிருக்கும் விசேஷ சமாசாரம் தங்களுக்குத் தெரியாதிருப்பதால்.

இளவரசன்:—என்ன விஷயம். ஏதேனும் புதுவேட்டை வந்திருக்கிறதோ?

குமாரவேலுப் பிரபு :— காணக்கிடைக்காத வேட்டை. கைக்கு எட்டாதது. நானும் கண்ணுல்மட்டும் கண்டிருக்கிறேன். நெருங்கவழி யகப்படவில்லை.

இளவரசன்:—ஓகோ உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கிறது. பார்த்தும் இருப்பீர்கள் என்று விளங்குகிறது. ஆனுல் நான் போட்டிக்கு வந்தால் உங்களுக்குக் கஷ்டமாகுமென்று என் வரையில் சங்கதி யெட்டவிடாமற் செய்திருக்கிறீர்களென்று கருதுகிறேன். ஆயினும், செல்லப்பா நீதான் எனக்கு எதையும் ஒளிக்காமல் பெயர். ஊர் முதலிய யாவும் விவரமாய்க் கூறவேண்டும்.

செல்லப்பன்:—நான் இருக்கிற வுண்மையை யுள்ளபடி கூறிவிடுகிறேன். கிழக்கு தேசத்திலிருந்து ஒரு நட்சத்திரம் புதிதாய் நமது நகரத்தில் வந்திருக்கிறது. அதன் பெயர் மதனவல்லி. அதன் அழகு முதலிய யாவும் அதன் பெயருக்குப் பூரணமாய்ப் பொருந்தியதே. அந்த அழகை விவரித்துக்கூற என்னுல் முடியாது அவளுடைய பெயரைத்தவிர அவளைப்பற்றிய மற்ற எந்த விஷயமும் ஒருவர்க்கும் தெரியாது. அவள் மிக்க செல்வவதியாகவே காணப்படுவதால் பணத்திற்கு மயங்கிவிடுகிறவளல்ல. நமது நகரிலுள்ள ஒரு முதற்றரமான செல்வச் சீமானுகிய ஒரு பிரபு வெறும் கையொப்பமிட்ட செக்கை யவளிட மனுப்பி "உனக்குப் பிரியமான தொகையை இச்செக்கில் குறித்து

மாற்றிக்கொள்; உன் அறிமுகமட்டும் எனக்கிருந்தால் பெரும் புண்ணியம் பெற்றவனுவேன்" என்று எழுதினர். அச்செக்கை யவள் அப்படியே வேறொரு கடிதவுறையில் போட்டு அவருக்கே திருப்பி யனுப்பிவிட்டாள். அதற்குப் பதில்கூட ஒருவரி யெழுதவில்லை. இந்த ஒரு திருட்டாந்தத்தால் அவளுடைய மற்ற குணங்களை நீங்களே யறிந்துகொள்ளலாம். அவள் வசிக்கும் இடத்திற்குச் சென்று அவளைக்காண அனுமதிபெற்றவர்கள் ஒருவருமில்லை. இவ்வளவே சங்கதி. இதுதான் எனக்குத் தெரிந்த விஷயம்" என்றுன்.

கர்னல் மாரப்பன்:—எல்லாம் சரிதான்; அவள் இன்னும் கற்பழியாதவளேயென்று யார் கூறக்கூடும்? நமது கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் அவளிடம் அறிமுகமானவர்கள் ஒருவரேனுமில்லை.

இம்மொழிகளைக் கேட்டதே செல்லப்பன் முகத்தில் ஒருவித விகாரமுண்டாயிற்று. ஆனல் அதை யாருங் காணவில்லை.

சர்தார் சூரியநாயகம்:—"இத்தகைய விஷயத்தை அனுபவத்தால்தான் அறியவேண்டும்" என்றுன்.

சுகசிங்கம் பிரபு:—இதன் உண்மையை யெப்படி யறிவது. நம்மில் இரண்டொருவர் அவ்வபூர்வ மாதை வண்டியிற் செல்லும்போதுமட்டும் கண்ணுற் பார்த்திருக்கிறேமேயன்றி வாயால் பேசியவர்கள்கூட ஒருவருமில்லை. அப்படியிருக்க முதலாவது அவள் தன் வீட்டிற்குள்வர நமக்கு அனுமதி யளிக்கவேண்டும். பிறகு அவளோடு சம்பாஷிக்கும் புண்ணியம் பெறவேண்டும். இதற்காக முயற்சிசெய்தாலொழிய இது முடிகிற காரியமல்ல.

சூரியநாயகம் பிரபு:—திரண்ட செல்வ முடையவரும் எத் தகைய மாதரையும் கண்டமாத்திரத்தில் அவர்களது அன்பைப் பெற்றுக்கொள்ளும் சாமர்த்திய முடைய வருமான சுகசிங்கம் பிரபுவே முயற்சி செய்யத் தக்கவர்.

சுகசிங்கம் பிரபு:—அது ஒழுங்கல்ல. அந்த விஷயத்தைப் பற்றி யார் முதல் முதல் பிரஸ்தாபம் செய்தீர்களோ அவர் அதில் தலையிட் டாண்டு பார்க்கவேண்டும்.

இதைக்கேட்ட செல்லப்பன் முகத்தி லுண்டான ஒரு வித விகாரத்தை யடக்கிக்கொண்டு, "உங்கள் யாவரிலும் எல்லாவிஷயத்திலும் தாழ்ந்தவனாகிய யான் என் சிற்றறி விற்குப் புலப்படும் விஷயத்தைக் கூறிவிடுகிறேன். அதா வது அந்த மதனவல்லி ஒருவருடைய அழகிற்காவது, செல் வத்திற்காவது மயங்கிவிடத் தக்கவளல்ல. அவள் செல்வம் செல்வாக்கு இரண்டிலும் உயர்தரப் பதவியையே விரும்பு கிறவள். அது கிடையாதாயின் கலியாணம் செய்து கொள்ளவேண்டும், ஒருவருக்கு மனைவியென்ற கௌரவம் வேண்டுமென்ற அக்கரையுமில்லை.

சுகசிங்கம் பிரபு:—நீ கூறுவதன் அர்த்தம் என்ன?

செல்லப்பன்:—கூறுகிறேன். அவளுடைய ஆசை ஒரு அரசனிடமேனும் அல்லது இளவரசனிடமேனும் அபிமான ஸ்திரீயாயிருந்தாலும் இருக்கலாம் என்ற கருத்துடையவள்.

இதைக்கேட்ட இளவரசன் மிக்க சந்தோஷத்தோடு கலகலவென்று நகைத்துக்கொண்டே,

"ஆ! செல்லப்பா! நீ கூறியதன் கருத்து இன்ன தென்று தெரிந்துகொண்டேன். நான் முயற்சி செய்தால்

செய்யலாமென்று ஜாடையாய்க் கூறுகிறாய். ஆறுபேர் இருக்கும்போது, யாவர்க்கும் முன்னாடி நானே அச்சுதந்தி ரத்தைக் கைக்கொள்வது நியாயமல்ல. அப்படி யொருக் காலும் கூடாது. யாவர்க்கும் சமமான சுதந்திர மிருக்க வேண்டும். அவரவர்கள் தனித்தனி முயற்சிசெய்ய வேண் டும். அவளுடைய காதலைக் கைப்பற்றும் அதிஷ்டம் யார் பெறுகிறார்களோ அந்த ஆளுக்கு நான் ஆறாயிரம் சவரன் பரிசளிக்கிறேன்" என்றான்.

இதைக்கேட்டதே யாவரும் சந்தோஷத்தோடு கர கோஷம் செய்தார்கள்.

சுகசிங்கம்பிரபு அப்படியாயினும் ஒவ்வொருவராய்த் தானே முயற்சிசெய்யவேண்டும்?

செல்லப்பன்:—"மகாராஜா அவர்கள் கூறுவது சரியான ஏற்பாடே. யார் முதலில் முயர்ச்சி செய்வது என் பதை யவரே கூறவேண்டும்" என்றான்.

இளவரசன்:—"பட்சபாதம் கூடாது. ஆறுபேரும் முயற்சி செய்யவேண்டியதே. ஒருவர் செல்கிற வேளையில் இன்னொருவர் செல்லக்கூடாது. அதற்கெப்படி வழி யெனில், நாம் ஆறுபெயர் இருக்கிறோம். வாரத்தில் ஏழுநாட்க ளிருக்கின்றன. திருவுளச் சீட்டுபோட்டு திங்கட்கிழமை முதலாக யாராருக்கு எந்தெந்தக் கிழமை வருகிறதோ அந்தந்தக் கிழமையில் அவரவர் முயற்சிசெய்யவேண்டும். அந்தக்கிழமை வேறொரு வர் செல்லலாகாது. இதில் சூது வாது, ஒருவருக் கொருவர் தீங்கு செய்தல் இப்படிப்பட்ட விஷயங்கள் கூடாது. அவரவர் விஷயத்தைக் கபடமின்றிக் கூற வேண்டும். இதுவே நிபந்தனை" என்றான்.

அதன்படி சீட்டு போட்டதில் கீழ்க்கண்டபடி முறையேற்பட்டது.

திங்கட்கிழமை — குமாரவேலுப்பிரபு
செவ்வாய்க்கிழமை — ஸர்தார் சூரியநாயகம்
புதன்கிழமை — கர்னல் மாரப்பன்
வியாழக்கிழமை — இளவரசன்
வெள்ளிக்கிழமை — சுகசிங்கம் பிரபு
சனிக்கிழமை — செல்லப்பன்

இந்த ஏற்பாட்டிற்கு யாவரும் மிக்க சந்தோஷத்தோடு சம்மதித்தார்கள்.

———

4 - வது அத்தியாயம்

விருந்து நடந்த தினத்திற் கடுத்த திங்கட்கிழமை காலை ஒன்பதுமணியிருக்கும் இரத்னபுரி நகரத்தின் மேல்பாகத்தில் சுகவாசஸ்தலங்கள் பலவுண்டு. அவற்றில் ஒரு அழகிய மாளிகையைச் சற்று கவனிப்போம். அம் மாளிகை மிக்க பெரிதல்ல. சுமார் நான்குபேர் சுகமாய் வசிக்கக்கூடியது. அதன் முன்பக்கம் மல்லிகை முல்லை இருவாட்சி சம்பங்கி முதலிய மலர்ச் செடிகள் பத்தி பத்தியாய் பார்ப்போர் கண்களைக் கவரத்தக்கதாய் இருந்தன. இவை அம்மாளிகை முழுதும் நறுமணம் வீசிக்கொண்டிருந்தன. மாளிகையின் மற்ற மூன்றுபக்கங்களிலும் உலவுவதற்குச் செப்பனிட்ட பாதைகளையுடைய அழகிய தோட்டமிருந்தது. அம்மாளிகையி னுட்பக்கம் எங்கும் மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவரோரங்களில் தொங்கவிட்

டிருக்கும் விலைமதிக்கொணுத் திரைச்சீலைகளையும், மிக்க விலையுடைய முதல்தரமான சாமான்களையும் காணும்போது அம் மாளிகையில் வசிப்போர் அதை யலங்கரிப்பதில் பணத்தை இலட்சியம் செய்யவில்லையென்று தெரிந்தது.

அம்மாளிகையின் பிரதான கூடத்திற் கருகாமையி லுள்ள போஜன அறையில் அழகிய மாது ஒருத்தி சுமார் காலை 9 மணிக்குப் போசனம் அருந்திக்கொண்டிருக்கிருள். அவள் அழகு ஓவியப்புலவன் எவனுலும் எழுதக்கூடிய தல்ல. அவளுடைய கூந்தலைக் கண்ட மேகங்கள் அதன் அடர்த்திக்கும் கறுமைக்கும் வெட்கி எங்கொளிக்கலா மென்று இடமகப்படாமல் வானத்தில் அலைந்துகொண்டிருக் கிறது. அவளுடைய நெற்றியின் பிரகாசத்தைக் கண்டு கண் ணுடியே வெட்கப்பட்டு கொஞ்சமாவது அதனளவு பிரகாச மடையலாமென்று பாதரசத்தைப் பூசிக்கொள்ள முயன்ற தெனின் அதிகமாய் நாம் கூறவேண்டியதில்லை. அவளுடைய புருவங்களைக் கண்டு மதனன் வில்லும் அந்தோ நமக்கு இடை யிடையே கணுக்க ளிருக்கின்றனவே யென்று துய ரடையும். செவ்வரிபடர்ந்து நீண்ட அகன்ற கண்கள் இரண் டும் காணும் வாலிபர் உள்ளத்தை யுடனே கொள்ளைகொள் ளும் வல்லமை பெற்றுள்ளன. அவளுடைய அதரம் கோவைக் கனியையும், செம்முருக்க மலரையும் பழிக்கத் தக்க நிறமும் பள பளப்பு முடையவை ஆதலால் கெட்டி முத்து வரிசையாய்க் கோக்கப்பட்டதை யொத்த தந்த பந்திகளைத் தம்முள்ளடக்கிக்கொண்டிருக்கும் பவழப்பெட்டி போல் அவை பிரகாசித்தன. அவளுடை யீர்க்கிடை புகாத வட்டமாய்ப் பருத்து அண்ணுந்து பொற்கலங்களைப் போன் றிருக்குந் தனபாரங்களும், மின்னலையும், உடுக்கையையும் வெட்கச்செய்யும் சிற்றிடையும் அன்னநடையும், குயிலைப் பழிக்கும் இனிய குரலும் பூரண சந்திர வதனமும், இனிய

மொழியும் புன்முறுவலும் இன்னதன்மையவென வெளி யிடத்தக்கவையல்ல. ஆயினும் இவள் அழகு ஒருவாக்கி யத்தால் கூறக் கூடியதே. அதாவது. பிரம்மதேவன் நாம் உலகில் எத்தனையோ அழகுவாய்ந்த மாதரைப் படைத்து நாரைப் பிரமிக்கச் செய்திருக்கிறோம். ஆனால் அழகு என் பதையே உருவாக்கி சிருட்டித்தால் அது எப்படி யிருக் குமோ பார்ப்போமென்று இவளைப் படைத்தான் என்பதே. இத்தகைய அழகுவாய்ந்த ஸ்திரீ யாராயிருக்கும் என்று நண்பர்கள் வியப்புறுவீர்கள். அவள்தான் ஆறுபேரும் பந் தயம் போட்டுக்கொண்டிருக்கும் மதனவல்லி.

இவ்வாறு எதிலும் குறைவின்றி ஆனந்தபோகத்தை யனுபவித்துக்கொண்டிருக்கும் மதனவல்லி பூரண சந்தோ ஷத்தோடிருக்கிறாளாவெனின், அந்தோ இந்த மிசிரம உல கத்தில்கூட அவ்விதக் கலப்பில்லாத போகம் கூடக் கிட்டு மென்று நினைக்கலாகுமோ. ஒன்றுக்கும் குறைவில்லாத நிலை மையிலிருக்கும் நமது மதனவல்லியும் ஒவ்வொரு சமயத்தில் முகம் வெளுத்து மனம் சோர்ந்து ஆழ்ந்த துயர்க்கடலில் விழுந்தவள்போல் காணப்படுவாள். ஆனால் அவ்வாறு அவள் மனதில் வெளிவாமல் புதையுண்டிருக்கும் வியாகூலம் இன்னதென்று ஒருவர்க்கும் தெரியாது. அத்துயரம் வரும் போது அவள் மிக்க கஷ்டத்தோடு அந்த இருளையோட்ட முயன்று அச்சமயம் அதை யடக்கிப் புன்முறுவலாலும் உல்லாச வார்த்தைகளாலும் அதை மறைத்து விடுவாள்.

அவள் உள்ளத்தில் புதையுண்டு அப்போதைக் கப் போது தலைநீட்டும் அத்துயரம் என்ன, ஏதோ மறுபடி சரிப்படுத்த முடியாத குற்றம் செய்துவிட்டாளா? தன் கற்பை யிழந்துவிட்டாளா? அரிய அன்புள்ள நெருங்கிய சுற்றத்தாரை யிழந்துவிட்டாளா? பயப்படவேண்டிய தீய

வழியில் தலையிட்டுவிட்டாளா? அல்லது இதுகாறும் காப்பாற்றிய கற்பை யினி யிழக்க நேரிடுகிறதேயென்று கவலைப்படுகிறாளா? எந்த காரணத்தால் அத்துயரம் மூளைத்திருக்கிறது என்று பார்ப்போர் உணர்வது கஷ்டமாகவே யிருக்கிறது.

பகல் ஒருமணி யாயிற்று. ஜானகியென்னும் தோழி வந்து வழக்கப்படி மதனவல்லிக்கு அழகிய கெம்பீரமான உடையை யுடுத்தி விலையுயர்ந்த பணிதிகளால் அவளுக்கு அலங்காரம் செய்வித்தாள்.

மதனவல்லி யவளை நோக்கி "அம்மாயி அம்மாள் எங்கே?" என்றாள்.

தோழி:—"அந்தம்மாள் பெரியகடை வீதிக்குச் சென்றிருக்கிறார்கள். அழைத்து வரட்டுமா?" என்றாள்.

மதனவல்லி:—வேண்டாம் வேண்டாம். ஆயினும் இச்சமயம் அம்மாது என்கூட விருந்தால் நன்றாயிருக்குமென்று நினைக்கிறேன்.

அலங்காரம் செய்துகொண்டபின் மதனவல்லி வீதியின் பக்கமாயிருக்கும் மேல்மாடியிலுள்ள தாழ்வாரத்தில் திரையின்பின் மறைந்து நின்றுகொண்டு வீதியைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு அங்கிருந்து தோட்டத்தின் பக்கமாயிருக்கும் மேல்மாடி தாழ்வாரத்திற்குச் சென்று அங்கு விலையுயர்ந்த கூண்டுகளிலிருந்த கனரி பட்சிகளின் இனிய கீதத்தைக் கேட்டுக்கொண்டும். கிளியைக் கையிலெடுத்து அதோடு விளையாடிக்கொண்டு மிருந்தாள்.

அச்சமயம் தோட்டத்தின் மதில்சுவர் ஓரத்தில் நாணயமான உடை யணிந்துகொண்டிருந்த ஒரு மனிதன் நின்று

கொண்டு தன்னை யுற்றுப் பார்ப்பதைக் கண்டாள். உடனே அவள் முகத்தில் ஒருவித மலர்ந்த மாறுதல் உண்டாயிற்று. அதை யடக்கிக்கொண்டு தான் அம்மனிதனைக் காணுதவள் போலவே கிள்ளையுடன் விளையாடிக்கொண்டிருந்தாள் அப்படியிருந்தாலும் பக்கவாட்டால் பன்முறை யவனைப் பார்த்துப் பார்த்து, அவன் உயரமான அழகிய தேகக்கட்டுடையவன் என்றும் சுமார் 30 வயதுடையவனென்றும் தெரிந்து கொண்டாள்.

அம்மனிதன் மதில் ஓரத்தில் நின்றபடியே அவளைப் பார்த்து அவள் மிக்க அழகுடையவளென்று கண்டு கொண்டாலும், அவள் ஜாடையாய்த் தன்னைப் பலதரம் பார்த்ததையும், பன் முறைய வள் மூகத்தில் உண்டான மாறுதல்களையும் காணவில்லை. அவள் இன்னும் அவனைக் காணுதவள் போலவே தன் கிளி யோடு விளையாடிக்கொண் டிருந்தாள். சற்று நேரத்திற்குள் அவள் ஹா! ஹா! வென்று ஆத்திரத்தோடு கூவினுள்.

ஏனெனில் அவள் கையிலிருந்த கிளி எப்படியோ தப்பி யோடிவிட்டது. அது தோட்டத்தில் சற்று நேரம் பறந்து கடைசியில் மதில் சுவர் மேல் உட்கார்ந்தது. சற்று தூரத்தில் நின்றுகொண் டிருந்த அம்மனிதன் நடந்த சம்பவத்தைக் கண்டதும் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து கிளியைப் பிடித்துக்கொண்டான். அதைக் கையில் வைத்துக்கொண்டே மதனவல்லியை நோக்கினுன். அவள் அங்கிருந்தபடி அவனுக்கு வந்தனமளித்தாள். உடனே யவன் முகத்தில் மிக்க சந்தோஷக்குறி யுண்டாயிற்று.

அவன் அக் கிளியை யெடுத்துக்கொண்டு தோட்டத்தைச்சுற்றி வீதியின் பக்கமாய்ச் சென்றுன். செல்லும் போது அவன் முகத்திலுண்டான சந்தோஷம் உள்ளடங்

காது ஆ! "நாம் புறப்பட்டவேளை நல்லதாயிருந்ததால் எந்த தெய்வமோ நாம் இவளோடு கஷ்டமில்லாமலே பேசும்படி யான சந்தர்ப்பத்தை யுண்டாக்கிற்று" என்று வாயால் வெளிவந்தது.

அவன் தெருவாசற்படி யருகில் செல்லும்போது கதவு முன்னடியே திறக்கப்பட்டிருந்ததோடு ஒரு கிழவேலைக்காரி யும் கிளியை வாங்கிக்கொண்டுபோக அங்குவந்து ஆயத்த மாய் நின்று கொண்டிருந்தாள்.

அம்மனிதன் தெருவாசற்படியி லிருந்தபடி கிளியைக் கொடுத்துவிட்டுப் போகிறவனுயில்லை. எந்தவிதத்திலாவது அவளை நேரிற்கண்டு வார்த்தையாட வேண்டுமென்று தனக் குள் நாட்டமுடையவனு யிருந்தான். ஆகையால் கிளிக்காக வந்த அவ் வேலைக்காரியை நோக்கி "நான் ஏதோ என் நல்லதிர்ஷ்டத்தால் கிளியைப் பிடிக்கும் பாக்கியம்பெற்றே னுதலால், நானே நேரில் இதை உனது எஜமாட்டியிடம் அளிக்கும்படி நீ யெனக்கு அனுமதி யளிக்கவேண்டும்" என்று இனிய மொழிகளால் வேண்டிக்கொண்டான்.

வேலைக்காரி இவன் கூறுவது நியாயமாகவே யிருக்கி றது என்று கருதியவள்போல் ஒருபதிலுங் கூருமல் அவனை யழைத்துக்கொண்டு இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்ட படிகளின் வழியாய் மேல்மாடிக்குச் சென்ருள். அவள் பின்னுல் கிளியை யெடுத்துக்கொண்டு செல்லும் அம்மனி தன் "மதனவல்லி எந்த மனிதனையாவது நாம் உள்ளே யழைத்துப் பேசிக்கொண்டிருந்தால் நமது பெயருக்கு ஊனம் நேரிடுமென்று எந்த வேளையிலும் மிக்க ஜாக்கிரதை யோடிருக்கிருள்" என்று தனக்குத்தானே கூறிக்கொண் டான். அதற்குள் இவர்கள் மாடியிலேறி ஒரு அறை யரு கிற் சென்ருர்கள்.

வேலைக்காரி அந்த அறையின் கதவின்மேல் ஒரு கையை வைத்துக்கொண்டே "யார் காணவருவதாய் நான் கூறுவது?" என்று வினவினள்.

அம்மனிதன்: "குமாரவேல் பிரபு" என்றான். மறு நிமி டம் கதவு திறக்கப்பட்டது.

---

5 - வது அத்தியாயம்.

கதவு திறக்கப்பட்டதே மதனவல்லி எதிர்கொண்டு வந்து பிரபுவை நோக்கி "பிரபுவே! இந்தத் துஷ்டக் கிளி தங்களுக்கு மிக்க தொந்திரவு கொடுத்துவிட்டது" என்று கூறிக்கொண்டே கிளியைக் கொண்டுபோய் கூண் டில் விட்டாள். பிரபுவோ அவள் கூடவே சென்றார்.

பிறகு இருவரும் ஆசனங்களில் அமர்ந்தபின் பிரபு "ஆ! நான் இக்கிளிமேல் கோபமடைகிறேன்" என்றார்.

மதனவல்லி:—கோபமா! ஏன்?

பிரபு:—"ஆம். நீ இவ்வளவு அன்பு வைத்திருக்க இக்கிளி யுன்னைவிட்டு ஓடிவிடப்பார்க்கிற நன்றி யில்லாமைக் குத்தான் அதன்மேல் கோபமடைகிறேன். ஆ! அத் தகைய அன்பிற்குப் பாத்திரவானாகிய கிளி யானா யிருந்தால்..." என்றார்.

மதனவல்லி கலகலவென்று நகைத்தாள். இதைக் கண்ட பிரபு, பாபம் மிக்க வெட்கமடைந்தார். தான் கூறிய கருத்தை யவள் உணர்ந்து மனமிளகி விடுவாளென்று அவர் கருதினார். அதற்கு மாறாய் தன் மொழிகளை யவள் கேலிக்குத் தகுந்த விஷயமாய்க் கருதி நகைத்து விடவே அவருக்கு மிக்க வெட்கமாய் விட்டது. தன்னை அவமானப்

படுத்திய மாதிரியாய்விட்டது. அதற்குள் மதனவல்லி மறுபடி பக்கங்கள் வெடிக்குமாறு நகைத்து அலுத்துப்போய் ஆசனத்தில் சாய்ந்து விட்டாள்.

பிரபு தன் வெட்கத்தைச் சமாளித்துக்கொண்டு "நான் கூறியதன் கருத்து இன்னதென்று தெரிவிக்கட்டுமா?" என்ருர்

மதனவல்லி:—வேண்டாம். வேண்டாம். உமது கருத்து நன்ருய் விளங்குகிறது. உமக்கு ஒரு கிளியாய்விட வேண்டுமென்று ஆவலாயிருக்கிறது.

பிரபு:—உன்னுடைய கிளி.

மதன :—தாங்கள் அவ்வாறு கூறுவதினுலேயே நான் மகிழ்ந்து விடுவேன் என்று தாங்கள் கருதுவதாயின் நான் மிக்க சிறுபிள்ளைக் குணமுடையவளென்று தாங்கள் கருதியிருக்கவேண்டும்.

பிரபு:—நான் அப்படி நினைக்கவில்லை. அனேகம் ஸ்திரீகளை விட நீ மேலான குணமுடையவளா யிருக்கிருய் என்று தெரிந்துகொண்டேன்.

மதன:—பேஷ், இன்னெரு முகஸ்துதி.

பிரபு:—நான் கூறுவதுண்மை. உன்போன்ற உயர்ந்த மாதர்க்காக உயிரைக்கூட கொடுக்கச் சம்மதிப்பேன்.

மதன:—பிரபுவே! எனக்காக ஒருவர் உயிரைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு அவசியமுமில்லை. நான் அப்படி விரும்பவுமில்லை.

பிரபு:—அப்படியாயின் உனக்காக என்னை யுயிர் வைத்துக் கொண்டிருக்கும்படி கட்டளையிடுகிருயோ?

மதன:—நீர் கூறுவதன் கருத்து இன்னதென்று எனக்குப் புலப்படவில்லை.

பிரபு:—அப்படியாயின் நான் கூறுவதைச் சற்று பொறுமை யாய்க் கேட்டுக்கொள்ளவேண்டும்.

மதன:—சரி கூறும். தாங்கள் ஒரு உதவிசெய்ததால் நாம் சம்மதிக்க வேண்டியதாயிற்று. இன்றேல் ஒருக்காலும் கேட்கச் சம்மதிக்கமாட்டேன்.

பிரபு:—நான் உன்னை யிப்போதுதான் பார்க்கவில்லை. சில நாட்களாய் உன்னுடைய இணையற்ற வனப்பைக் கேள்விப்பட்டு அதுமுதல் சதா உன் சிந்தனையே யென்மனதில் குடிகொண்டிருக்கிறது; இன்று உன் முக தரிசனைக்காகவே மதில் சுவாண்டைவந்து காத் துக்கொண்டிருந்தேன்.

மதன:—தங்கள் நோக்கம் எனக்குத் தெரிந்திருந்தால் நான் தங்களைக் கண்டபோதே மாடிமேலிருந்துக் கீழே யிறங்கிவிட்டிருப்பேன். தாங்கள் சற்றுநோ அறிமுகத் திற்குள் அளவுமீறிப் போய்விடுகிறீர்கள் ஆகையால் தாங்கள் தயவுசெய்து போய்வாலாம்.

பிரபு:—"அப்படி யுன் சமுகத்திலிருந்து என்னைத் துறத்தி விடவேண்டாம்; நான் கூறுவதைக்கேள். இதோ உன் பாதத்தில் முழங்காலிட்டுப் பணிந்து கூறுகிறேன்" என்று தன் வார்த்தைப்படி முழங்காலிட்டு, "நான் உன்மேல் மெய்யான காதல்கொண்டிருக்கிறேன். இது மனப்பூர்வமான......" என்பதற்குள்.

மதனவல்லி "பிரபுவே! உடனே எழுந்து உட்காரும். இன்றேல் உமது வார்த்தைக்கு நான் செவிகொடேன்" என்றாள்.

பிரபு அவ்வாறே எழுந்து ஆசனத்தில் உட்கார்ந்ததே மதனவல்லி "இனித் தாங்கள் கூறுவதைச் சுருக்கமாய்க் கூறுங்கள்" என்றாள்.

பிரபு:—"நான் கூறுவது உண்மையேயன்றி முகஸ்துதியல்ல என் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாதது. நான் உன்னுடைய இணையற்ற வனப்பைக் கண்டதுமுதல் உன் உருவத்தை மறந்ததேயில்லை. உன் வனப்பு என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. இனி என் ஆயுள் முழுமையும் உன் சுகக்ஷேமத்தைக் காப்பாற்றும் ஒரு தொண்டே யென் ஊழியமாகும். என்மனம் உன் மேல் கொண்டிருக்கும் அன்பு எல்லையில்லாதது......" என்பதற்குள்,

மதன:—"பிரபுவே தாங்கள் எனக்கு அளிக்க நினைக்கும் கௌரவ பதவிக்காகவும் தங்கள் அன்பிற்காகவும் நான் மிக்க நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்; ஆனால் தாங்கள் என்னோடு அறிமுகமாகி இருபத்திநான்கு மணிநேரம்கூட ஆகவில்லை. இந்தச் சொற்பகாலத்திற்குள் தாங்கள் என்னை மணம்புரிய விரும்புவதாய்க் கேட்கிறீர்......." என்றதே.

பிரபு:—"மணம்புரியவா?" என்றார்.

மதனவல்லி மிக்க வியப்படைந்தவள்போல், "மணம் புரிந்துகொள்ள இல்லாமல் வேறென்ன நீர் கூறுவது? மற்றபடி நீர் இக்நேரம் பேசுவதின் அர்த்தமென்ன? என்ன தான் கூறுகிறீர்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்றாள்.

பிரபு:—மதனவல்லி நீ யிம்மாதிரி ஒன்று மறியாதுபோல் என்னை யிம்சிப்பது நியாயமல்ல. என்னுடைய கருத்து இன்னதென்று நீ இதுகாறும் தெரிந்துகொண்டேயிருக்கலாகும். என் காதலை நிராகரிக்கவேண்டாம்.

மதன:—"ஒரு புருடன் ஒரு கன்னியின்மேல் தான் பூரணக் காதல்கொண்டிருப்பதாய் அவள் முன்னிலையில் கூறி

வேண்டிக்கொள்வானுயின் அவன் தன்னை மணம்புரிய விரும்புகிறுன் என்று அக்கன்னிகை அபிப்பிராயப்பட வேண்டியதேயன்றி வேறென்ன அபிப்பிராயம் கொள் வாள்? அதிலும் அக்காதலன் கௌரவப்பட்டமாகிய பிரபுப்பட்டம் பெற்று ஜனங்களால் நீதிநெறியும் பெருந் தன்மையுமுடைய செல்வச் சீமானென்று மதிக்கப் பட்ட பெரிய மனிதனுயிருக்கும்போது வேறென்ன தான் அவள் கருதிக்கொள்வது?" என்றுள்.

பிரபு:—"மதனவல்லி! என் கருத்தை நீ யுணர்ந்துகொள்ள வில்லையென்று நான் கருதக்கூடவில்லை. வேடிக்கை யாய் என்னை யிம்சிக்கவேண்டுமென்றே நீ யிப்படி சம் பாஷிக்கிறுய். என்வாயாலேயே நான் யாவும் வெளி யிடவேண்டுமென்று கருதுகிறுய். உன் மனேபீஷ்டப் படியே நானே மொழிகிறேன். நான் உன்மேல் பூர ணக் காதல்கொண் டிருக்கிறேன் என்பது உனக்கு இப் போது உண்மையாய்த் தெரிந்தே யிருக்கிறது. இரு வர் மனமும் ஒத்து பரஸ்பர அன்புடையவர்களாயிருத் தலே காதலர்களின் சுகத்திற்கு அவசியம் வேண்டிய விஷயமாகும். உலகத்திலுள்ள மூடர்கள் வீணுய்ச் செய்யும் கலியாணம் என்ற சடங்கினுல் என்ன பயன்? அந்த வீண் விஷயங்களால் நமக்கு என்ன வேண்டி யது......'' என்றதே,

மதனவல்லி இருகண்களும் கோபத்தணல்வீச முகத் தில் குபீல் என்று இரத்தம் ஏறச் சட்டென்று ஆசனத்தை விட்டெழுந்து,

"பிரபுவே! போதும் போதும். தங்களுடைய நேர்த்தி யான கருத்தை நன்குணர்ந்துகொண்டேன். இனி நமக் குள் ஒருவார்த்தைகூடவேண்டாம். தாங்கள் உடனே இதை

விட்டுச் செல்லலாம்" என்று கூறிக்கொண்டே பிரபுவிற்கு வழிகாட்டி வீதிவரையில் அழைத்துக்கொண்டுபோகத் தன் வேலைக்காரனை யழைப்பதற்காக மணியடிக்கும் கயிற்றை யிழுக்கக் கரத்தை நீட்டினள்.

பிரபு:—"வேண்டாம், வேண்டாம் சற்று பொறு. நான் கூறும் மொழியைச் சற்று நிதானமாய்க்கேள்" என்று ஏதோ கூறத்தொடங்குவதற்குள்,

மதன:—பிரபுவே! நான் மூடமென்று எண்ணிக்கொள்ள வேண்டாம். நீர் இன்னும் ஒரு வார்த்தைகூடக் கூற வேண்டிய அவசியமேயில்லை. நீர் மணம் செய்து கொண்டிருப்பதை நான் முன்னமே யறிவேன். ஆனால் பெரிய மனிதனென்று கௌரவம் பாராட்டிக்கொண்டு மற்றபேர்களை யலட்சியமாய்க் கருதி தலைநிமிர்ந்து இருமாப்போடு திரியும் உம்முடைய அக்ரமமான அல்ப குணம் எவ்வளவு தூரந்தான் செல்கிறது பார்ப்போ மென்று இவ்வளவுவரை பொறுத்துக்கொண் டிருந் தேன்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபு மிக்க வெட்கமும் அவ மானமு மடைந்து கோபமூண்டு "ஓ மதனவல்லி வீணாய் எனக்குக் கோபமூட்டினால் கொடிய விரோதியை யுண்டாக் கிக்கொள்வாய். என்னாலாகாதென்று நினைக்காதே. உன் கொட்டத்தை யெப்படியும் அடக்கிவிடுவேன்" என்றார்.

மதனவல்லி "இப்போது உமது யோக்கியதை பூரண மாய் வெளியாய்விட்டது. உமது சூரத்தனம் யோக்கியதை யற்ற வீரத்தனமே யாதலால் இதற்குத்தான் பேடி சூரத் தனம் என்று கூறப்படுவது. இனி யொருவார்த்தை கூட மொழியாமல் உடனே யோய்விட்டால் மரியாதையாகும்; இன்றேல் வலுகட்டாயமாய் என் வேலைக்காரரால் வெளியிற்

றள்ளப்படுவீர்" என்று கூறிக்கொண்டே மணியடிக்கும் கயிற்றை வேகமா யிழுத்தாள். பிரபுவின் மனோநிலைமை சட்டென்று வாய்திறக்கக் கூடாமலிருந்ததால் அதற்குள் இரண்டு வேலைக்காரர்கள் அங்கு வந்துவிட்டார்கள். ஆகையால் பிரபு ஒன்றும் கூறாமல் மௌனமாய் எழுந்து வீட்டை விட்டு வெளிப்பட்டார்.

நண்பர்களே! இப்போது அப்பிரபுவின் மனோநிலைமையை யாரால் கூறமுடியும். சாதாரணமாகவே திரண்ட செல்வமுடையவர். உலகில் செல்வம் ஒன்றிற்கே எவ்வளவோ மரியாதை யுண்டு. இவர் செல்வத்தோடு அரசரும் மரியாதையோடு ஏற்றுக்கொள்ளத்தக்க பிரபுப்பட்டம் பெற்றவர். இத்தகைய கௌரவமுள்ளவர் கேவலம் ஒரு ஸ்திரீயினிடம் இத்தகைய அவமான மடையவேண்டியதேன்? எத்தகைய உயர்ந்த வஸ்துவாயினும் அததன் அந்தில் இருக்க வேண்டும். இன்றேல் மரியாதையை யிழக்க வேண்டியதே. இவர் எவ்வளவு அந்தஸ்துடையவராயினும் மனைவியிருந்தும் நெறியல்லா நெறியிற் சென்றபடியால் இத்தகைய அவமானம் நேரிட்டது. ஆனால் இந்தத் துர்நடக்கை யுடையவர்களுக்கு நேரிடக்கூடிய துன்பங்களை நோக்க இது மிகக் கொஞ்சமேயாகும்.

குமாரவேல் பிரபு மதனவல்லியின் வீட்டைவிட்டுப் புறப்பட்டு பிரமை யடைந்தவன்போல் பத்தடி தூரம் சென்றபோது எதிர்வாடையிலிருந்த ஹோட்டலிலிருந்து ஒருமனிதன் வெளியில் வந்தான். அவன் நமது கதையில் சம்பந்தப்பட்டவனாதலால் அவனைப்பற்றி சற்று விவரமாய்க் கூற வேண்டியிருக்கிறது.

பார்வைக்கே அம்மனிதன் மற்ற மனிதர்களைவிட ஒருவித விசேடமுடையவன்போல் காணப்படுவான். அவனுக்கு

வயது நாற்பதிருக்கும். நடுத்தரமான உயரமும் நல்ல கட்டுடைய தேகமும் உடையவன். அவனுடைய பிரம்மாண்டமான கறிய மீசைகள் பார்ப்போர்க்குப் பயத்தையுண்டாக்கும். அதிகமாய் உரோமங்க ளடர்ந்து தொங்கும் புருவங்களும், கொள்ளிக்கட்டைகள்போல் பிரகாசிக்கும் சிறிய குண்டுமணிபோன்ற கண்களும் எதற்கும் அஞ்சாத குரூரமான முகமு முடையவன்.

அவன் நடுத்தர மனிதர்கள்போல் உடை யணிந்திருந்தான். அவன் கையில் மிக்க பளுவான பூண்கள் கட்டிய ஒரு தடி யெப்போது மிருக்கும். அவன் உடைகள் மாசடைந்து இரண்டொரு விடங்களில் கிழிந்தும் இருந்தன. ஆனால் அவன் மிக்க நாணயமான உயர்ந்த உடுப்புகளை யணிந்துகொண் டிருப்பவன் போலவே கெம்பீரமாய் நடந்தான். அவன் நடையோ, "நமக்கு யார் இலட்சியம்? யாவரும் நமக்கு அடங்கி நடக்கவேண்டியவர்களே. நாம் பயப்படவேண்டிய காரணம் இல்லவே யில்லை" யென்று கருதுபவன்போல் இறுமாப்போடு தலைநிமிர்ந்து நடப்பான்.

அவன் வாலிபத்தில் சைனியத்தில் ஒரு சிறிய உத்தியோகஸ்தனு யிருந்தான். தன் முரட்டு குணத்தாலும் எதற்கும் அஞ்சாத துணிகரச் செய்கைகளாலும் அவன் சைனியத்தில் கொஞ்சம் பெயரெடுத்தான். ஆனால் அவனுடைய துஷ்டத்தனம் சூதாடுதல் முதலிய துர்க்கிரியைகளால் வேலையினின்றும் நீக்கப்பட்டான். அப்படி நீக்கப்படினும் அவன் தன் இராணுவச்சாயலை விட்டு விடவில்லை. வேலையை விட்டபின் நகரத்திலேயே வாசம் செய்துகொண்டிருக்கிறான். அவன் கடை வீதிகளிலும் ஹோட்டல்களிலும் நடமாடிக்கொண்டு யாவரையும் சினேகம் செய்துக்கொள்வான். முக்கியமாய் நகரிலுள்ள நெறிதவறித் திரியும் செல்வந்தரு

டைய புத்திரர்கள், சதா சூதாடல், பரஸ்திரீகள் சகவாசத்தி லேயே காலங்கழித்தல் இதேவேலையிலிருக்கும் வாலீபப் பிர புக்கள் இவர்களை யறிமுகமாக்கிக்கொண்டு சமயோசிதப்படி தட்டிப்பறித்து தன் காலத்தைக் கழித்துக் கொண்டிருப்ப வன். அகப்பட்டவர்களிடம் தயவு தாட்சண்ணியமின்றி உருஞ்சிவிடுவான். ஹோட்டல்களில் பிரவேசிக்கும் துர் நடக்கையுடைய பிரபுக்கள் முதலிய உயர்ந்த அந்தஸ்தினர் களைக்கூடப் பக்குவமாகவும் தந்திரமாகவும் அறிமுகமாக்கிக் கொள்வான். ஒருதரம் அப்படி யாய்விட்டால் பிறகு அவர் கள் அவனிடம் தப்பமுடியாது. அவர்களே ஜாடையாய்ப் போய்விடுவதானாலும் விடமாட்டான். அவனோடு விரோ தித்துக் கொள்வதென்றாலும் அவர்களுக்கே பயம். ஆகை யால் அனேகம் பிரபுக்களும் பிரபு மக்களும் அவனுக்கு அறி முகமானவர்கள். இவ்வாறே யவன் தினம் ஒருவரிடம் கால் ரூபா ஒருவரிடம் இரண்டணு இம்மாதிரி சிறு தொகைகளாக வே வாங்கி தன் வாழ்நாட்களைக் கழிப்பான். சில சமயங்க ளில் உணவிற்கின்றி வருந்துவதுமுண்டு இவன் பெயர் கபூர் கிருஷ்ணன்.

கபூர் கிருஷ்ணன் பெயர் இரத்தினபுரியிலுள்ள எல்லா ஹோட்டல்களிலும் நன்ருய்த் தெரியும். எல்லா நியாயாதி பதிகளுக்கும் தெரியும். ஏனெனில் களவு முதலிய குற்றங் களைச் செய்யாவிடினும் மதுவின் வெறியேறி யிருக்கும் காலங்களில் முரட்டுத்தனமாய்ச் செய்யும் சிறு குற்றங்களுக் காக அவன் பன்முறை அபராதங்கள் செலுத்தி யிருக்கி ருன்.

குமாரவேல் பிரபு மதனவாசத்தைவிட்டு வெளிப்படும் அதே நிமிடம் கபூர் கிருஷ்ணனும் ஹோட்டலினின்றும் வெளிப்பட்டான். அவன் எப்போதும் தனியா யிருப்ப

தில்லை. அவன் எங்கு சென்றாலும் அவனுடைய நிழலைப் போல் அவனைவிட்டுப் பிறியாத தோழன் ஒருவனுண்டு. அவன் பெயர் எச்சன். அவன் தன் எஜமான்போலிராது, அவனுக்குப் பத்து கெஜம் தூரத்திலேயே பின்னால் பாதை யோரத்தில் பூனைபோற் பதுங்கிக்கொண்டு செல்வான். அவன் தன் எஜமானிடம் நாய்போல் நன்றியுடையவன். நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும், சாப்பிட்டாலும் பட்டினி கிடந்தாலும், சுகத்திலும் அசுகத்திலும், க்ஷேமத் திலும் ஆபத்திலும் அவனை விட்டுப் பிறியமாட்டான். சதா அவன் நிழல்போலிருப்பான். எஜமான் கெர்ச்சித்து வெளி வரும் சிங்கம்போலெனின், எச்சன் பதுங்கியிருக்கும் வெடை நாகம்போன்றவன்.

மதன வாசத்தைவிட்டு வெளிப்பட்ட பிரபு வீதியில் வந்து நாலைந்தடி சென்றதும் நாலுபக்கமும் திரும்பித் திரும் பிப் பார்த்து பேசாமல் ஒரு வண்டியிலேறி நேராய் வீடு போய்ச் சேரலாமென்று சிந்தித்துக்கொண்டே வண்டிமேடு எங்கிருக்கிறதென்று பார்த்துக்கொண்டே நடக்கும்போது கபுர் கிருஷ்ணனால் தடாலென்று அழைக்கப்பட்டார்.

கபுர் கிருஷ்ணன்:— ஆ! பிரபுவே! எப்படி க்ஷேமம் என்று கூறிக்கொண்டே இராணுவ முறைப்படி வந்தன மளித்து, "தாங்கள் எக்காரணத்தாலோ அதிருப்தி யாகவும் கோபமாகவும் இருப்பதாய்க் காண்கிறது" என்றான்.

பிரபு:—"ஆ! கபுர்! வந்தனம். அப்படி கோபம் ஒன்றுமில்லை. நான் கொஞ்சம் அவசரவேலையாய்ச் செல்கின்றேன்" என்றார்.

உடனே பிரபுவின் காத்தைப் பிடித்துக்கொண்டு "ஆ! அப்படியா! ஆயினும்..." என்றதே பிரபு "ஆம் நான் கூறிய படி அவசர வேலையாய்..." என்றார்.

கபுர் கிருஷ்ணன்:—"அப்படியாயின் நான் தங்களை யொரு விஞடிகூட அனுவசியமாய் நிறுத்தமாட்டேன்" என்று தாழ்ந்த குரலாய், "நான் வந்துகொண்டே யிருக்கையில் அதோ அந்தத்திருப்பத்தில் இலந்தைப் பழம் விற்கும் கிழவி யாரோ துஷ்டப்பிள்ளைகள் தன் பழத்தட்டைக் கீழே தள்ளிவிட்டுப் பழங்களையெல்லாம் கொள்ளையடித்துச் சென்றார்களென்று அழுதுகொண்டிருந்தாள். அந்தோ அத்தகைய அனுதைக் கிழவிக்கு உதவி செய்யாவிட்டால் மனுஷத் தன்மையாகுமாவென்று என் ஜேபியில் கையிட்டுப் பையை யெடுக்க முயன்றேன். அந்தோ காலையில் ஒரு அவசர வேலையாய்ப் புறப்பட்டபோது எப்படியோ கலவரத்தால் பணப் பையை மறந்து வந்துவிட்டேன்..."

பிரபு கிருஷ்ணனுடைய தந்திரசாமர்த்தியங்களைப் பன்முறை கண்டிருக்கிறார் ஆதலின் "சரி சரி, இப்போது கொஞ்சம் பணம் வேண்டும். எவ்வளவு?" என்றார்.

கிருஷ்ணன்.—"அப்படி யொன்றும் அதிகமாய் வேண்டுவதில்லை; ஒத்தை ரூபா யிருந்தால் போதுமானது" என்றான்.

அச்சமயம் பிரபுவின் மனதில் ஒருவித யோசனை யுதித்தது. அவர் கிருஷ்ணனுடைய முகத்தைநோக்கி "ஆ! கிருஷ்ணு! நீ யெனக்கொரு சொல்ப உதவி செய்யக்கூடுமாயின் ஒரு ரூபாயல்ல பல பவுன்கள் உனக்குக் கிடைக்கும்" என்றார்.

கிருஷ்ணன் ஓகோ ஏதோ காரக்கி யிருக்கிறதென்று அறிந்து சந்தோஷத்தால் மலர்ந்த முகத்தோடு பிரபுவை நோக்கிப் பிரபுவுவே "தங்களுக்கு என் உதவி வேண்டியதாயின் தலையாற் செய்யக் காத்திருக்கிறேன்; அது எத்

தகைய கஷ்டமான வேலையாயினும் சரி. என் யுக்தியாலும் என் எச்சனுடைய தந்திரசாமர்த்தியத்தாலும் செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை. அது எவ்வளவு நுட்பமான விஷயமாயினும் சரி, தாங்கள் வாய்திறந்து கூறவேண்டியதே தாமதம்'' என்றான்.

பிரபு இப்படி வீதியின் ஓரத்திற்கு வாவென்று மதனவல்லியின் வாசஸ்தலத்தைச் சுட்டிக்காட்டி,

"அதோ தெரிகிறதே அந்தவிடத்தில் யார் வசிக்கிறது தெரியுமா ?'' என்றார்.

கிருஷ்ணன்:—"ஆகா! நேற்று நான் ஹோட்டலில் உட்கார்ந்து சிற்றுண்டி யருந்திக்கொண்டே அம்மாளிகையைப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். அதில் மிக்க அழகு வாய்ந்த ஒரு மாது வசிக்கிறாள். அவளுடைய நாமம் என்னவென்று நான் விசாரிக்கவில்லை. ஆனால் அவளே யதன் சொந்தக்காரியென்றுமட்டும் தெரிந்துகொண்டேன்'' என்றான்.

பிரபு:—"சரி. அவள் பெயர் மதனவல்லி. நீ எனக்குச் செய்ய வேண்டிய உதவி யின்னதென்று சுருக்கமாய்க் கூறி விடுகிறேன். ஆ! உன்னுடைய வலது கையாகிய எச்சன் எங்கே?'' என்றார்.

கிருஷ்ணன்:—அதோ நான்கைந்து கட்டிடங்களுக்கு அப்பாலுள்ள சந்தில் மறைந்து நிற்கிறான் பாரும்.

பிரபு:—இப்போது எனக்கு ஆகவேண்டிய நுட்பமான வேலைக்கு அவனே பூரணமாய்த் தகுதியுடையவன்.

கிருஷ்:—அதென்னவேலை ?

பிரபு:—"அவ்வேலை யென்னவெனில் நீங்கள் அவ்வீட்டின் மேலேயே கண்வைத்திருக்கவேண்டும். அவ்வீட்டிற்கு

யாரார் வருகிருர்கள், எந்தவேளைக்கு வந்தார்கள்; எந்நேரம் அங்கிருந்தார்கள் எப்போது போனுர்கள். வருகிறவர்கள் ஆணுயினும் சரி, பெண்ணுயினும்சரி, யாராயினும் சரி. அவர்கள் பெயர் முதலிய விவரமனைத்தும் கூடியவரையில் குறித்துவைத்துக்கொள்ள வேண்டும். இதுமட்டுமல்ல அவள் வீட்டைவிட்டு எந்தநேரத்திலேனும் சரி வெளியில் புறப்பட்டால் ஒருவர் கூடவே தொடர்ந்து சென்று அவள் யார் யார் வீட்டிற்குச் செல்லுகிருள். அங்கு யாரைக் கண்டு பேசுகிருள். எந்நேரம் அங்கிருக்கிறள் முதலிய விபரங்களையும் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்ளவேண்டும்" என்ருர்.

கபுர் கிருஷ்ணன்:—"பிரபுவே! தங்களுக்கு எள்ளளவு கவலையும் வேண்டாம்; அவள் வீட்டிற்கு இராஜகுமாரனே வந்தாலும் சரி, ஒரு ஈ வந்து சாளரத்தில் உட்கார்ந்தாலும் சரி, அம்மாது வண்டியில் வெளி சென்ருலும் சரி, காலால் நடந்து சென்ருலும் சரி எள்ளளவு சங்கதியைக்கூட தவறவிடாமல் குறித்துவைத்துத் தங்களுக் கறிவிப்போன் என்பதில் எள்ளளவு சந்தேகமும் கொள்ளவேண்டாம்" என்ருன்.

பிரபு:—நான் கூறிய விஷயத்தின் கருத்தை யறிந்துகொண்டாய் என்று சந்தோஷ மடைகிறேன். அவளைப்பற்றிய சங்கதி எவ்வளவு அல்பமானதாயும் அனுவசியமாயும் தோன்றினுலும் ஒன்றையும் விடவேண்டாம். இன்னென்று அவ்வீட்டில் அம்மாயி என்ரெருு மாது இருக்கிருள். அவளும் எங்கெங்கே போகிருளென்று கண்டு பிடிக்கவேண்டும். உங்கள் இருவருக்கு அவகாசம் போதாவிட்டால் இன்னெரு ஆளை யமர்த்திக் கொள்ளுங்கள்.

A 6536

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை1915ளு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி	1	0
2-பாகமும் ...	4	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட், மதராஸ்.